அறுபதுக்கு அறுபது

அறுபதுக்கு அறுபது

கவிதைத் தொகுப்பு

இராயவரம்

திரு. செ. மெ. பழனியப்ப செட்டியார்
திருமதி மீனாட்சி ஆச்சி

மணி விழாவில் வழங்கப்பெற்றது

10—3—1980

தொகுத்து வழங்குவோர்:

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா
கவிஞர் செல்ல கணபதி

ஏஷியன் அச்சகம்
சென்னை—600 014.

இந் நூல்......

செயற்கரிய செயல்களினால் உயர்வு பெற்ற உயர்திரு. செ. மெ. பழனியப்பச் செட்டியாரவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடப் பெறும் இத்தொகுப்பில் அறுபது கவிஞர்களின் இனிய கவிதைகளைக் காணலாம்.

மனித வாழ்க்கையின் மேம்பாட்டுக்கு இன்றி யமையாத பத்துக் குணங்களைத் தலைப்புகளாகக் கொண்டு, ஒவ்வொரு தலைப்பிலும் ஆறு கவிஞர்கள் பாடினால் மொத்தம் 60 கவிதைகள் கிடைக்குமே என ஆசைப்பட்டோம். அந்த ஆசையைத் தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர் பெருமக்கள் அன்புடன் நிறை வேற்றித் தந்துள்ளனர்.

கவிஞர்களின் கைவண்ணத்தை, கற்பனைநயத்தை, கருத்துச் செறிவை, இனிய தமிழை, ஏற்றமிகு நடையை இக்கவிதைகளில் கண்டு இன்புறலாம்; பயன் பெறலாம்.

பல்லாண்டுகளுக்குப் பயன் தரும் வகையில் அமைந்த இந்நூலின் தொடக்கத்தில் இப்பத்துக் குணங்களின் மொத்த வடிவமாகத் திகழும் பழனியப்பச் செட்டியாரை வாழ்த்திச் சில கவிஞர்கள் மனங்கனிந்து பாடிய பாடல்களையும் இணைத்துள்ளோம்.

எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கிக் கவிதை களைப் புனைந்தளித்த கவிஞர்களுக்கும், இத்தொகுப்பு நன்முறையில் உருவாகப் பலவகையிலும் உதவிய திருவாளர் ரத்னம் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

காரைக்குடி,
4-3-80.

அழ. வள்ளியப்பா
செல்ல கணபதி



மணிவிழாத் தம்பதியர்

மலரும் மணமும்

விருந்தோம்பல்—1

அர. சிங்காரவடிவேலன்
புத்தனேரி ரா.சுப்பிரமணியம்
ஆ. பழநி
அரு. நாகப்பன்
புதுவயல் செல்லப்பன்
சோம. ராமலிங்கம்

நட்பு—2

சொ. சொ. மீ. சுந்தரம்
மா. வரதராஜன்
கொ. மா. கோதண்டம்
திருச்சி பாரதன்
இளையவன்
திருமாவளவன்

தொண்டு—3

கம்பன் அடிப்பொடி
வி. தில்லைநாயகம்
தமிழழகன்
வலம்புரி அண்ணாமலை
தம்பி சீனிவாசன்
கரு. செல்லமுத்து

பண்பு—4

கி. வா. ஜகந்நாதன்
தணிகை உலகநாதன்
குருவிக்கரம்பை சண்முகம்
இளங்கம்பன்
ரா. பொன்ராசன்
ஜெய பாஸ்கரன்

எளிமை—5

பெ. தூரன்
ரெ. முத்துக்கணேசன்
நா. மீனவன்
க. அ. ஆறுமுகனார்
மு. வலவன்
செல்ல கணபதி

அடக்கம்—6

லால்குடி ப. அரங்கசாமி
சக்திக் கனல்
நாரா. நாச்சியப்பன்
வெ. நல்லதம்பி
ராயவரம் குழ. கதிரேசன்
வெற்றியூர் சுப. திருஞானம்

தன்னம்பிக்கை—7

முடியரசன்
துறைவன்
கோ. வில்வபதி
காராளன்
அழ. வள்ளியப்பா
அரிமழம் பழ. செல்லப்பன்

பாசம்—8

சௌந்தரா கைலாசம்
மின்னூர் சீனிவாசன்
நாக. சண்முகம்
சு. சிவகாமசுந்தரி
பூவண்ணன்
மீனு பாரதி

உழைப்பு—9

பெரி. சிவனடியான்
தமிழன்பன்
மு. மேத்தா
நடாதூர் நம்பி
அரங்க. நெடுமாறன்
சென்னை பெ. ஜெகன்

சாதனை—10

அரு. சோமசுந்தரன்
மா. கண்ணப்பன்
கொத்தமங்கலம் விசு
ச. சவகர்லால்
அழகர்சாமி
பண்பழகன்

வாழ்த்துகள்

மன்னவன் வாழ்க !

அரசவைக் கவிஞர் கண்ணதாசன்

தொட்டதோ ஓர்தொழில், தொடர்ந்துதன் திறனால்
கட்டிக் காத்தது காகிதத் தொழிலே !
செட்டிமார் கூட்டம் தேசம் கடந்து
வட்டிக் கணக்கை வகையாய் எழுத
எட்டுத் திசையும் ஏகிய காலையில்
கட்டுக் காகிதக் கணக்கைப் பார்த்தும்
புத்தகக் கடையொன்று புதிதாய்த் திறந்தும்
புதிய தொழிலில் புகுந்தவர் இவரே !
இளமைப் பருவம், இருபது வயது
வளம் குன்றாத வாலிப வயது.
கையில் உள்ளதோ கடுகள வெனினும்
மனத்தி லுள்ளது மலையள வாகத்
தன்னம் பிக்கையால் தலைநிமிர்ந் திருந்தார் !
திருச்சி நகரில் தீரரின் கடையில்
நாற்பத் தைந்தாம் ஆண்டினில் இந்த
நல்லவர் முகத்தை நான்கண்டு கொண்டேன்.
அபிதான சிந்தா மணிஎனும் நூலை
அவரது கடையில் அடியவன் பெற்றுக்
கொஞ்ச நேரம் குலவி இருந்து
ராய வரத்தை நாடித் திரும்பினேன்.
அப்பொழு தேநான் அவரிடம் கண்டது
சுறுசுறுப் பென்னும் தொலையாப் பெருந்தனம்
நன்னம் பிக்கையின் நனிபெரும் மகனாய்
தன்னம் பிக்கையின் தலைச்சன் பிள்ளையாய்

அயரா உழைப்பின் அன்புச் செல்வமாய்
உயர்ந்து மேலும் உயர்ந்தவ ரிவரே !
பழனியப் பன்கை பணத்தை எண்ணுமேல்
கழனியில் உழுது கண்ட விளைச்சலே !
ஏய்த்தது மில்லை ; ஏமாந் தவரெனச்
சாய்த்த தலையுடன் தளர்ந்தது மில்லை.
தன்னம்மை பேரால் தனிப்பெரும் மாளிகை
கண்ணம்மை பில்டிங்ஸ் கட்டினு ரென்றல்
என்னம்மை அந்த ஈஸ்வரி கொடுத்த
பொன்னம்மை யாலே பொங்கிய வாழ்வே !
படிப்படி யாக ஏணியில் ஏறியும்
அடிஅடி யாக அளந்து நடந்தும்
தன்னை நம்பித் தனிவழி சென்ற
அன்னர் வாழ்வில் அறுபது வயதை
எட்டினர் என்பதே ஏக்கம் தருவது !
இன்னும் பன்னள் இவரது வாழ்வு
மின்னும் உயரும் மேனிலை எய்தும் !
அண்ணல் கண்ணன் அருளால் என்றும்
மன்னவன் வாழ்க ! வாழிய நீடு !

பல்லாண்டு வாழ்க !

புலவர் கா. நயினர் முகம்மது

பொன்னும் பொருளும் போகமும் புகழும்
மன்னிய வாழ்வே மாண்புடை வாழ்வென
நன்னூல் அறிஞர் நவிற்றுவர் ; எனினும்
இன்னநல் வாழ்வை எய்தினர் சிலரே !
அவருள்,
உலகமீக் கூறும் உயர்தன வணிகர்
குலத்துள் வந்தவன் ; கூர்த்தம தியினன் ;
உலேயா முயற்சியால் ஓயாத உழைப்பால்
ஊழையும் உப்பக்கம் ஓடக் கண்டவன் ;
என்னுடை யன்பன் ; இனிய நண்பன் ;
என்னுடை வாழ்வெலாம் தன்னுடை வாழ்வென
உடுக்கை யிழந்தவன் கைபோல எனது
இடுக்கண் களைந்த இனிய பண்பினன் !
கோட்டுப்பூப் போல மலர்ந்துபின் கூம்பாத
நட்பின் இலக்கணம் நயமுறக் கண்டவன்
கயப்பூப் போல் முன்மலர்ந்து பின்கூம்பும்
இழிதகை நட்பு இவன்பால் இல்லே.
''ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பலநாட் பயின்று பலரொடு செல்லினும்
தலேநாட்போன்ற விருப்பினன்'' தணியாக் காதலன்!
என்னேயும் உடன்வைத் துண்ணும் உவகையன்
''சிறுசோற் ருனும் நனிபல கலத்தன்
பெருஞ்சோற் ருனும் நனிபல கலத்தன்''
சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்

இழிகுணம் இவன்பால் இம்மியும் இல்லை
இன்னபல பண்பெலாம் இனிது தழைக்க
பழனியப் பாவின் பண்புடை யில்லாள்
இன்முகம் இன்சொல் இனியவே செய்தல்
நல்விருந் தோம்பும் நல்லறம் கண்ட
மீனுட்சி யம்மையின் மேன்மைக் குணமே
காரண மெனில்வேறு கழற வேண்டுமோ ?
பன்னூறு குடும்பம் பசியற்று வாழ
நன்னெறி வகுத்த மன்னிய புகழோன் !
பழனியப் பாவெனும் பண்புடைக் குரிசில்
புகழ்தொறும் புகழ்தொறும் புகழ்மிக் கோங்கும்
இகழ்வில் பெருங்குணத்து ஏந்தல் இந்நாள்
மணிவிழாக் கண்டனன் ; மாண்புடைப் புலவீர் !
அதனை
எண்ணி யெண்ணி நண்ணும் உவகையால்
வாழ்த்துவம் வம்மின் ; வாழ்த்துவம் வம்மோ !
தாழ்த்த சென்னியும் கூப்பிய கையுமாய்ப்
பழனியப் பாவெனும் பணிவுடை நம்பி
மனைவி மக்கள் மாண்புடைச் சுற்றமொடு
நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும்
இனிதுறப் பெற்று இறைவ னருளால்
பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
வாழ்க வென்றே வாழ்த்துவம் யாமே.

புறநிலை வாழ்த்து !

புலவர் லால்குடி ப. அரங்கசாமி

உள்ளம் நிறைந்தானை உயர்ந்த மனத்தானை
தெள்ளத் தெரிந்தானை தெய்வ நலத்தானை
ஊக்கம் உழைப்பருமை உலகுக்கு உரைத்தானை
ஆக்கம் அதர்நாடி அடையும் திருவானை

காட்சிக் கெளியானைக் கண்ணுக் கினியானை
மாட்சி நிறைந்தானை மணிவிழாக் காண்பானை
மழையின் வளம்போல மாறாதே ஈவானை
பழனி யப்பனைநாம் பாடுகம்!வா எல்லா !

எல்லார்க்கும் நல்லானை எண்ணம் சிறந்தானை
செல்வர்க்குச் செல்வனுய்ச் சீர்த்தி மிகுந்தானை
நிலையில் திரியானை நீண்ட புகழானை
மலையின் உயர்ந்தானை மரபிலங்கப் பாடுகம்! வா

சுற்றம் புரப்பானைச் சொல்லடக்கம் வாய்ந்தானை
கற்றடக்கம் நின்றானைக் கலையடக்கம் கொண்டானைச்
செற்றம் அடக்கியனைச் சிந்தை அடக்கியனை
வெற்றி வினையடக்க வேந்தனைநாம் பாடுதும்! வா

எல்லா ! நாம் அன்னவனின்
அன்பினையே பாடுவமா ! ஆற்றலினைக் கூறுவமா !
இன்புரையைப் பேசுவமா ! ஏதுரைப்பம் எல்லா !
அகவை அறுபத்து ஆர்ந்துநிறை அண்ணலவர்
தகவின் அடக்கத்தைத் தண்டமிழால் பாடுதும்! வா

பேராளன் அம்மகனின் பெருவளமும் வாணும்
சீரார்ந்து திக்கெட்டும் சிறந்திலங்கப் பாடுதும்! வா.

பழநியப்பர் - மீனாட்சி வாழ்க, வாழ்க !

குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா

அடுத்தடுத்த வீட்டினிலே பிறந்தோம் நாங்கள்!
ஆடலிலும் பாடலிலும் கலந்தோம் நாங்கள் !
படிக்கையிலும் ஒன்றாகப் படித்தோம் நாங்கள் !
பணிகளிலும் ஒன்றாக இணைந்தோம் நாங்கள்.

பொய்யெதையும் அறியாத மெய்யப் பர்க்கும்
புண்ணியமே வடிவான கண்ணம் மைக்கும்
துய்யமணிக் குலவிளக்காய்த் தோன்றி னாரே
சுறுசுறுப்பின் மறுவடிவாம் பழநி யப்பர் !

பள்ளியிலே படிக்கையிலே புத்த கங்கள்
பலதுறையில் படித்துமிக மகிழ்ச்சி யுற்றார்
துள்ளிமிக மகிழ்கின்ற காலத் தேயும்
துடிப்புடனே பலநூல்கள் கற்க லுற்றார்.

மாணவரா யிருக்கையிலே வாணி பத்தில்
மனம்ஈடு பட்டதனால் 'குப்தாஸ்' என்னும்
பேனாவை டஜன்கணக்கில் வரவ ழைத்துப்
பிரியமுடன் நண்பருக்குப் பகிர்ந்த ளித்தார்.

இளம்வயதில் பிறருக்கே உதவு கின்ற
இயல்பான குணமிவர்க்கும் இருந்த தாலே
வளம்பெற்றே வாழ்ந்துவரும் இந்த நாளில்
வரையாது வழங்குகின்ற வள்ள லானார்.

கொண்டவரின் மனமறிந்து நடப்ப தோடு
குறைகண்டால் பொறுத்தருளும் பண்பி னேடு
உண்டியளித் தோம்புகின்ற சிறப்பும் கொண்ட
உறுதுணையாய் மீனுட்சி வாய்க்க லானுர்.

வியப்புமிகு பணிகளினுல் அரிமா சங்கம்
மேன்மைமிகு கவர்னரெனப் போற்றி வந்த
அயர்ச்சியிலா ஒருதம்பி செல்லப் பன்தன்
அண்ணனுடன் தொழில்வளர்க்கும் அமைதி யாளன்.

காந்தி, முத்து, செல்லப்பன் மூன்று மைந்தர்
கண்ணம்மை சோலையெனும் இரண்டு பெண்கள்
ஈந்துவக்கும் மனம்கொண்ட தந்தை போலே
இசைபடவே வாழுகின்ருர் இனிமை பொங்க.

காலஞ மைஊற்றித் திருச்சி தன்னில்
கடைபரப்பி வைத்தவராம் பழநி யப்பர் !
வேலவனின் திருவருளை எந்த நாளும்
வேண்டிடுவார் ; அவனருளால் மேன்மை பெற்ருர்.

புத்தகங்கள் பதிப்பிக்கும் துறையில் நல்ல
புதுமையெலாம் செய்தவராம் வை.கோ விந்தன்
அத்துறையில் பழநியப்பர் நுழைவ தற்கே
ஆர்வத்தைத் தூண்டினரே அந்த நாளில்.

செஞ்சொல்லின் செல்வரெனும் சேதுப் பிள்ளை,
திசையெல்லாம் புகழ்ஐயன் பெருமாள் கோனுர்,
பிஞ்சுமனம் கவர்கின்ற தி. ஜ. ர. போல்
பெருமைதரும் அறிஞர்களைக் கவர்ந்த நல்லார்.

என்னுடைய முதல்நூலை அச்சுப் போட்டு
எல்லாரும் எனைஅறிய வாய்ப்புத் தந்த
பொன்மனநல் நண்பர்புகழ் பாடப் பாடப்
பூரிப்புக் கொள்ளுகிறேன் மகிழ்ச்சி துள்ள.

எழுத்தாளர் யாவரையும் இல்லம் சேர்த்தே
இனியபல விருந்துகளை அளித்த ளித்துக்
குளிர்கின்ற மனங்கொண்ட பழநி யப்பர்
குறையின்றி வளர்பிறையாய் வளரும் அன்பர்.

வெள்ளிவிழாக் கண்டுபல பணிக ளாலே
வியப்பூட்டும் குழந்தைஎழுத் தாளர் சங்கம்
வள்ளன்மை மிக்கவராம் பழநி யப்பர்
வசித்தஒரு இல்லத்தில் பிறந்த தென்போம்.

கழுக்குன்றம் ஊர்தனிலே பள்ளி ஒன்றைக்
கருத்துடனே பேணியுமே வளர்த்து நெஞ்ச
அழுக்ககலச் செய்கின்றார் அறிவுக் கண்கள்
ஆண்டுதொறும் மாணுக்கர் பெறுகின் றாரே.

அழகுடனே அறிவூட்டும் புத்த கங்கள்
அவற்றினிலே வண்ணமிகு படங்க ளோடு
குழந்தைகளின் நூல்பலவும் கொணர்ந்த தாலே
கொண்டனரே பரிசுடனே பாராட் டெல்லாம்.

அறிவொளியைப் பரப்புகின்ற புத்த கங்கள்
அனுதினமும் மணம்பரப்பும் ஊது வத்தி
சிறப்புடனே விளங்குகின்ற கட்ட டங்கள்
செப்பிடுமே பழநியப்பர் செயல்தி றத்தை.

மிகப்பெரிய தொழிற்சாலை நிறுவு தற்கே
மேலான திட்டமெலாம் வகுத்தே இந்நாள்
குகனருளால் வேலைகளைத் தொடங்கி விட்டார்
குவலயத்தே அதுவிரைவில் சிறக்கக் காண்போம்.

எண்ணத்தில் உயர்ந்தபெரும் பழநி யப்பர்
எண்ணம்போல் சென்னையிலே உயர்ந்து நிற்கும்
'கண்ணம்மை பில்டிங்க்'ஸாம் எட்டு மாடிக்
கட்டடத்தை எழுப்பிநமை மலைக்க வைத்தார்.

முகராசி உடையவராம் பழநி யப்பர்!
முடித்திடுவார் எடுத்தசெயல் துணிச்ச லோடு
மிகமுயற்சி பொறுமையுடன், தன்னம் பிக்கை
மூவரிய குணங்களினுல் சிறப்புப் பெற்ருர்.

ஆல்போலப் பலருக்கும் நிழல ளிப்பார்;
அடுத்தவரை எந்நாளும் உயர்த்தி வைப்பார்;
பால்போல வெள்ளைமனம் கொண்ட தாலே
பகையின்றிப் பலதுறையில் வெற்றி பெற்ருர்.

பிள்ளைகளைக் காப்பதுபோல் சுற்றத் தாரைப்
பேணியுமே காப்பதிலே இன்பம் காண்பார்!
எள்ளளவும் குறைவின்றி அவர்கள் வாழ
ஏற்றபல உதவிகளைச் செய்யும் நல்லார்.

எத்தனையோ தொழிலாளர் வீட்டில் இன்று
இருளகற்றும் விளக்கதனை ஏற்றி வைத்தார்!
மெத்தபுகழ் செல்வங்கள் சேர்ந்த போதும்
மிகஅடக்கம் கொண்டவராய் விளங்கு கின்ருர்

பயனுடைய வாழ்க்கைதனை வாழ்ந்து காட்டும்
பழநியப்பர்-மீனாட்சி வாழ்க, வாழ்க !
முயற்சியினில் முன்னேற்றப் பாதை செல்லும்
மீனாட்சி — பழநியப்பர் வாழ்க, வாழ்க !

பெற்றெடுத்த மக்களுடன் பேரன் பேத்தி
பெருமையுடன் நீடூழி வாழ்க, வாழ்க !
சுற்றமுடன் நண்பர்களும் சூழ்ந்து போற்றச்
சுகமுடனே நீடூழி வாழ்க, வாழ்க !

வித்தகர் பழனியப்பர் !

கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

பார்த்தவர் வியக்கும் வண்ணம்
பதிப்பகத் துறையில் கீர்த்தி
சேர்த்தவர் **பழனி யப்பர்**
செட்டிநா டீந்த செம்மல்
நேர்த்தியாய்த் தொழிலின் வெற்றி
நிகழ்த்தியே அறுப தாண்டு
பூர்த்தியாய் முன்னேற் றத்தில்
புதுநடை போடு கின்றார்.

அன்புடன் பலரும் நாடும்
ஆசியன் அச்ச கத்தைத்
தன்னரும் உழைப்பி னாலே
தனிப்பெரு நிலையாய்க் கண்டார் ;
அன்னைகண் ணம்மை பேரால்
அற்புதக் கட்ட டத்தைத்
தன்னிக ரில்லா தாகச்
சமைத்தவர் பழனி யப்பர்.

புத்தகத் துறையில் தோய்ந்து
புதுமைகள் புனைந்து தேர்ந்த
வித்தகர் பழனி யப்பர்
விருப்புடன் பழகிப் போற்றும்

உத்தமர் ; தமிழில் கோனுர்
உரையினுல் இளைஞர் தம்மைப்
பித்தராய்ச் செய்து கல்விப்
பெரும்பணி உதவி வென்ருர்.

இன்முகப் பொலிவி னுலே,
எழுத்தினை ஆள்வோர் தம்மைத்
தன்வய மாக்கி நூல்கள்
தந்திட உதவி செய்வார் ;
உன்னதத் தொழில்கள் ஓங்க
உலகெலாம் சுற்றி வெல்வார்
மன்னுக மீனு ளோடு
மணிவிழாப் பழனி யப்பர் !

கொள்கையில் இனியவர் !

கவிஞர் முருகுசுந்தரம்

கட்டுப் பாடும் கடமையில் கருத்தும்
திட்ட மிட்ட வாணிக வாழ்க்கையும்
திரைகடல் ஓடியும் திரவியம் தேடும்
குறைவற்ற ஊக்கமும் குன்ரு உழைப்பும்
அறக்கட் டளைகள் அமைப்ப தன்றிப்
புறக்கட் டளைகளைப் போற்ருப் பண்பும்
முழுவாழை இலையில் முழங்கைநெய் வாரத்
தேக்குப் பெருந்தூண் மாளிகை முற்றத்தில்
நாக்கு விருந்து நடத்தும் பாங்கும்
செட்டி நாட்டாரின் சிறப்பான பண்புகள் !
கழனிக் கரும்பு கைக்கப் பேசும்
பழனி யப்பச் செட்டியா ரவர்கள்
ஆடம் பரமிலா அந்தி நிலாப்போல்
வெள்ளை யாடையில் விளங்கும் தேனீ !
விரல்கள் பட்டதும் விம்மும் வீணைபோல்
குரலில் எளியவர் ; கொள்கையில் இனியவர் !
ஆயிரம் ஆயிரம் உழைப்பா ளர்க்குப்
பாயிரம் போன்றவர் ; அன்னுர் இன்று
அறுபது பதிப்பு வந்த பெருநூல்
சிறியதோர் அருவியாய்ச் சிலிர்த்துக் கிளம்பிப்
பெருமித வாழ்க்கை பெற்றவர் வாழ்கவே !

———

மனங்கவர் கள்வர்

கவிஞர் பழ. முத்துவீரப்பன்

பன்னவர் பழநி யப்பர்
பயன்மர மான வாழ்வு
எண்ணினுல் இதயந் துள்ளும்
ஈடிலா உழைப்பின் வாழ்க்கை !
மண்ணிலே நல்ல வண்ணம்
வாழலாம் புனிதச் சான்று
அண்ணலின் பெருமைக் கெல்லாம்
அறுபது நிறைந்த திந்நாள்.

சைவமும் தமிழும் வாழச்
சமைந்தசீர் நகரத் தாரில்
தைவளர் மணங்கள் போலத்
தகைவளர் கொடைக்கே ஆனுர் !
ஐவகைப் புலமும் பேணி
அறம்வளர் அகரம் ஆனுர் !
மைவளர் பண்பி னுலே
மனங்கவர் கள்வர் ஆனுர் !

சாறயர்ந் தன்ன செல்வம்
சான்றவர் அறிவா யிற்றே !
தேரமர் விருந்துப் பண்பு
திருவிழாப் பொலிவா யிற்றே !

பேரமர்ந் தன்ன இல்லம்
பெற்றதாய் உளமா யிற்றே !
ஆறமர்ந் தன்ன மேன்மை
அத்தனின் அருளா யிற்றே !

வந்தாரை அள்ளும் பேச்சு,
வரவேற்போ தென்றல் வீச்சு,
சுந்தரத் தமிழே போலச்
சுவைமிகு பலகா ரங்கள்,
மந்திரம் போட்டாற் போல
மயக்கிடும் விருந்துத் தோட்டம்,
பந்திகள் இல்லாப் போது
பழநியார் வீட்டில் ஏது ?

விருந்தெனும் வேரின் மீது
விளைவதே வெற்றி வாழ்வு !
கரும்பிவர் அதனைப் பெற்றார்
காவியத் தலைமை உற்றார் !
பெருந்தகை பெற்ற பேறு
பெறுவதே வாழ்க்கை ஆகும்
அரும்பெறல் இன்று போல
அறம்வாழ வாழ்க மாதோ !

உணர்ந்ததை உரைக்கிறேன்

செல்ல கணபதி

தோள்சுமந்த சுமைப்பளுவைத்
தோள்அறியும்
வாயிருந்தால் தோள்அதனைச் சொல்லிடுமா ?
சொல்லவிட மாட்டானே
தோள்உயர்த்திச் சுமந்திட்ட மாமன்னன் !
அடிஅடியாய் உயர்ந்தவன்தான்
அடுக்கடுக்காய்ப் பலமாடி உயர்ந்த தென்றால்
ஒரு நாளில் முடிவதுண்டா ?
ஆயிரம்பேர் சேர்ந்தடுக்கி வைத்தவைதான்
அடுக்கடுக்காய் உயர்ந்திருக்கும் மாளிகைகள்!
அதுபோல்தான் அவன்உயர்ந்தான்
அயராமல் உழைத்திருந்தான் !
ஆயிரம்பேர் உழைப்பையெல்லாம்
அவன்ஒருவன் தனித்துழைத்தான்
குருட்டதிர்ஷ்டம் எனச்சொல்லும் வாயில்லை
ஆகாயப் புரட்டென்றால் அதுவுமில்லை
இருவிழியைக் காத்திருக்கும் இமையயர்ந்த
சேதி யுண்டா ?
அவன்கதையும் அதுபோல்தான்.
உறக்கத்தை ஏப்பம்விட்ட நாள்கோடி
சோம்பலினைச் சுட்டெரித்த கதைகோடி
எறும்புக்கும் சுறுசுறுப்பைக் கற்றுத்தந்த
ஏற்றமிகு பேராசான்
எழில்நிலவு குளிர்கதிரை வீசுமென்றால்
இவன்மொழியின் புதுப்பாடம்
வைரத்தில் வாய்த்திருக்கும் திண்மை இந்த
மன்னவனின் இதயத்தில் பிறந்த துண்மை!

இவன்வாழ்ந்த வாழ்க்கை ஒரு
இனிய காவியம் !
எழத்துடிக்கும் இளைஞர்க்கோர் இனிய ராகம்!
நாணயத்தை உலகறியும்
நாணயந்தான் பலபேரை அறிந்ததில்லை.
நாணயத்தால் அறிந்தஇவன்
நாணயத்தால் உயர்ந்தவன்தான் !
நமைச்சல்எனும் ஆசைகளை அடக்கிவைக்க
நாணயத்தால் முடிவதுண்டு!
நாணயத்தால் சிறந்தவர்கள் கதையுமுண்டு
நாமுயர இவன்வாழ்க்கை வழியுமுண்டு!
கண்ணருகில் தூசிவிழ இமைதுடிக்கும்
கால்நடுவே குடைச்சல்எனில் கரம்துடிக்கும்
உறவுமக்கள் வாசலிலே துயரமென்றால்
உளம் துடிப்பான்
உறும் துயரம் அகற்றி வைப்பான்
உயர வைப்பான் !
தன்மக்கள் தன்சுற்றம் தனதுஊராம்
தரம்சிறந்தால் நாடென்னும் பொதுமை நோக்காம்
தான் உயர்ந்தால் போதாது
தலைதூக்க வேண்டும்உன் சுற்றத்தாரும்
தனித்தனியாய் உயர்ந்தாலும்
சுற்றமதும் சேர்ந்துயர்ந்தால் நாடுயரும் !
அவன் உயர்ந்தான்!
அண்டியவர் சேர்ந்துயர்ந்தார் !
அடுத்தாற்போல் நாடுயர அவன் உழைப்பான்
அறுபதிலே பூர்த்தியெனில் மணிவிழாவாம்
அவன் மனதில் பூர்த்தியுண்டா?
அடுத்தடுத்து உழைப்பதில்தான் இனி விழாவாம்

அவன் உழைப்பான் !
உழைக்கட்டும்
அவன் துணையும் அனுசரணை நல்கட்டும்!
ஓய்வெடுக்க வாழ்த்தில்லை
உழைத்துழைத்து மனம் நிறைக!
உழைப்பென்றால் உன் பெயரே நினைப்பதற்கு
உளம் கோடி வாழ்த்துகிறோம்
உயர்க ! வாழ்க !

மூலையிலே கிடந்தவன் நான்
முற்றத்தில் பாடுகிறேன் !
வாலைத் தமிழ்க்குமரி வாசலிலே பாடுகிறேன் !

அடித்தளத்தில் கிடந்தவன் நான்
அடிவயிற்றில் பசிக்கிறக்கம்
அடிமனத்தில் முனகல் ஒலி
அத்தனைக்கும் அவன்அடித்தான் சாவுமணி !
அரங்கேறிப் பாடவைத்தான்
அவன்கருணை ஆற்றலினால் ஆளான கும்பலிலே
அடியேனும் ஒருவன்தான் !
அவன்வாழ வாழ்த்தாமல் யார்வாழ வாழ்த்து வதோ !

அத்தைக்குத் துணை தந்தான்
வித்தைபல கற்றதெல்லாம்
அத்தை சொன்ன தந்திரம்தான்
அவள்துணையின் மந்திரம்தான்!
தவப்பயனா? ஊழ்வினையின் தனிப்பயனா?
அவர்நிழலில் குடியிருக்க வாய்த்த சுகம்!
அறுபதிலே நிறைந்தவர்கள் அன்பெல்லாம் நிறையட்டும்
அவர்போல ஊர்வாழும் பெறும்பேறே வளரட்டும்,

வெற்றிகள் தொடர்க !

வெற்றியூர் சுப. திருஞானம்

விழிகளே உவகை கொள்க !
வெ:ற்றியை எடுத்துச் சொல்க !
மொழியெலாம் தேனைப் பாய்ச்சும்
முறுவலர் **பழநி யப்பர்**
அறுபது நிறையும் இந்நாள்
அனைவர்க்கும் மகிழ்ச்சிப் பொன்னாள் !

குறையிலா வாழ்வு கண்டு
குளிர்தரு நிழலாய் நின்று
வரையிலாப் புகழைக் கொய்த
மன்னவர் வாழ்க வென்று !

தமிழரின் வீட்டில் கல்விச்
சாலைக்கு ஏகும் பிள்ளை
அமிழ்தென விரும்பிப் போற்றும்
அரியநல் 'கோனார்' தம்மை

ஆக்கியே அளிக்கும் கைகள்
அன்னவர் தங்கக் கைகள் !
நோக்கெலாம் உயர்ந்த நோக்கு
நுவலரும் பெருஞ்செல் வாக்கு

செந்தமிழ் செழிக்க வந்த
சேதுவின் நூற்க ளெல்லாம்
தந்தவர் என்றே இந்தத்
தாரணி போற்றும் வள்ளல் !

நொந்தவர் துயரம் காணில்
நொடியினில் உருகும் நெஞ்சம்
வந்தவர் மாற்ரு ரேனும்
வழங்கிடும் அன்பு மஞ்சம் !

உழைப்பினுல் உயர்ந்த சீலர்
உறுதுணை விடா முயற்சி
தழைத்தவர் அதனுல் இன்ரூர்
சரித்திரம் படைத்த செம்மல் !

இருபதின் எழுச்சி வேகம்
இணையிலாச் சுறுசு றுப்பு !
அறுபதைத் தொட்ட போதும்
அயர்வினைத் தொட்டா ரில்லை !

எண்ணரும் இல்லந் தோறும்
எரிகின்ற திருவி ளக்கு
மன்னவன் ஏற்றி வைத்த
மாண்பினைப் பெற்ற தாகும் !

காலஞ் மையில் தொட்டுக்
கவின்தொழில் பல தொடங்கி
சாலவே புகழைச் சேர்த்து
சாதனை புரிந்த வீரர்

இனியதோர் ஏஷியன் பேரிங்ஸ்
எனும்பெரும் தொழி லகத்தை
தனியராய்த் தோற்று வித்த
சாதனை இமய மாகும் !

சிறுகவே கட்டி நன்கு
சீர்பெற வாழ்க வென்ற
ஒருதனி மொழிக்கே நல்ல
உவமைதான் இவரின் வாழ்க்கை !

மனையறம் காக்க வந்த
மங்கலத் தாய்மீ னாட்சி
துணையெனத் திகழ்வ தாலே
தொட்டதெல் லாமே வெற்றி !

பேறுகள் யாவும் பெற்ற
பெற்றியைப் பெற்ற அண்ணல்
சீரொடு மக்கள் சுற்றம்
சிறப்புற வாழ்க ! வாழ்க !

காலங்கள் கோடி கோடி
காவலன் வாழ, செந்தில்
வேலவன் அருள்க நாளும்
வெற்றிகள் தொடர்க மேலும் !

——

விருந்தோம்பல்

செட்டித் திருநாட்டின் சிறப்பான விருந்தோம்பல்
பற்றிச் சமைக்கும் பாட்டும் கமகமக்கும்
'வாங்க' என பிள்ளைகளும் வரவேற்கும் இனியமொழி
ஓங்கார நாதம்போல் உள்ளத்தைக் குளிர்விக்கும்
திண்ணையிலே பிரப்பம்பாய் திண்டோடு
காத்திருக்கும்
விண்ணென்றே ஓடும் விசிறி குளிரூட்டும்
ஓங்கும் நிலைக்கதவின் ஓரத்தில் ஆச்சிமுகம்
வாங்க எனக்கேட்டு வளவுக்குள் மறைந்துவிடும்
வந்தவரும் வந்தசெயல் வாய்திறக்கும் முன்னாலே
முந்திக் குடிபொருள்கள் முகப்புக்கு வந்துவிடும்
மோரோ பழச்சாறோ முறுக்குடனே தேநீரோ
நேரம்போல் தந்து நெஞ்சை மகிழ்விப்பார்
அடுத்தவேளைச் சாப்பாட்டை அறுதிசெய்த
பின்னேதான்
தொடுத்த பேச்சைத் தொடர்ந்து முடித்திடுவார்
மதிய உணவென்றால் வைத்த கறியோடு
அதிகம் ஒருகறியோ அப்பளமோ பொரித்திடுவார்
மாலைப் பொழுதென்றால் வாழைப் பழத்தோடு
காலை இட்டிலியைக் கமகமக்கத் தாளிப்பார்
வெள்ளெனவே வருவாரேல் வெள்ளைப் பணியாரம்
சுள்ளென்ற துவையலுடன் துணைக்கங்கே
வந்திருக்கும்
வெளியார்க்கு வாழைஇலை ; வீட்டார்க்குத்
தட்டுக்கள்
''வழியாவே உண்ணலியே'' வாய்மணக்கும்
உபசாரம்

எந்தப் பொருளை இவர்உண்பார் எனப்பார்ப்பார்
அந்தப் பொருளை அள்ளிஅள்ளி வைத்திடுவார்
உண்டு முடித்தவுடன் ஓடோடிச் செம்பேந்தித்
துண்டும் தருவார் துடைத்தவுடன் திண்ணையிலே
பருவத்துக் கேற்ற பழம்தந்து தாம்பூலம்
உரிமையுடன் தந்திடுவார் உறங்குதற்குப்
பாய்தருவார்
இரவுதங்கும் வேலை எவருக்கும் நேர்ந்திடுமேல்
தரமான பலகாரம் பாலோடு தந்திடுவார்
மெத்தை விரிப்பார்; மேல்விரிப்பும் போட்டிருப்பார்;
பத்திரிகை தண்ணீர் பக்கத்தில் வைத்திடுவார்.
நட்பு விருந்தோம்பல் நானிங்கே சிறிதுரைத்தேன்
சிறப்பு விருந்தோம்பல் திருமணத்தில் கண்டிடலாம்
தஞ்சாவூர் தாட்டிலைகள், தமிழ்போன்று பலகறிகள்,
அஞ்சாறு வர்க்கன்னம் ஆள்நிற்கும் உபசாரம்
பழம்மிதக்கும் பாயாசம் பலகாரம் பத்துவகை
குழம்பில் நாலுவகை குடல்மணக்கும் நெய்ப்புலவு
பூப்போன்ற பச்சரிசி ; பொங்கலிலே நெய்வெள்ளம்
சாப்பிடுவார் நூறென்றால் சமைத்திடுவார்
ஐம்பதுபேர்
வருந்திப் பல்லாண்டாய் வந்த வருமானம்
விருந்தில் ஒருநாளில் வெந்து சுவையாகும்.
செட்டித் திருநாட்டின் சிறப்பான விருந்தோம்பல்
கட்டியுரைக்கக் கம்பன் வரவேண்டும்.

அன்புடைமை அடுத்தாற்போல் குறளில் காணும்
அதிகாரம் விருந்தோம்பல் ; பொருத்தம் அன்றோ?
இன்முகமும் இன்சொல்லும் இதயம் ஈர்க்கும்
இனிதான உபசரிப்பும் நிறைவு சேர்க்கும் ;
தன்னலத்தைப் பின்னுக்குத் தள்ளி வைக்கும் ;
தாராள மனத்துடனே பழக வைக்கும் ;
நன்னெறிகள் வரிசையிலே முன்னே நிற்கும்
நட்புறவை விருந்தோம்பல் திட்ப மாக்கும்.

முதல்நாளில் வாழையிலே ! அடுத்த நாளில்
முதிர்வான தையல்இலை ! மூன்றும் நாளோ
உதவுவது கையிலையாம் ! உள்நோக் கென்ன ?
ஒருமூன்று நாளுக்கு மேலே தங்கல்
இதமல்ல விருந்தினர்க்கே எனவே காட்டும்
எள்ளல்உரை இதுவென்றே தள்ள வேண்டும் !
முதல்நாளைப் போலேதான் எந்த நாளும்
முகமலர்ந்து விருந்தோம்பல் தமிழன் பண்பே.

செல்விருந்து பேணுபவர் இல்லம் நாடித்
திருமகளும் விருந்தினராய்ச் சேர்வாள் கூடி ;
செல்வமிகச் செல்வாக்கும் பெருகும் எந்தச்
செலவேனும் பொருட்படுத்தத் தேவை யில்லை ;

இல்வாழ்க்கை வெற்றியெலாம் விருந்தைப்
போற்றும்
ஏற்றத்தில் தெளிவாகும் ; இணையில் லாத
நல்லமுதம் என்றாலும் விருந்தோ டுண்ணும்
நல்லமனம் நன்மையெலாம் உண்டு பண்ணும்

விருந்தென்றால் புதிதென்ற பொருளும் உண்டாம் ;
வீட்டிற்குப் பலதடவை வருவோ ரேனும்
விருந்தென்று பேணுவதே மேன்மை யாகும் ;
விருந்தோம்பல் மிகச்சிறந்த வேள்வி யாகும் ;
பெருந்திருவோர் பெருமையெலாம் விருந்தைப்
போற்றும்
பெற்றியிலே தெரியும்இதைப் புரிந்து தொண்டு
புரிந்திடுவோர் தொகைஇன்னும் பெருகத் தூண்டும்
பொதுமறையின் நெறிமுறைகள் பரவ வேண்டும்

உறவினர் நண்பர் ஒவ்வொரு வர்க்கும்
பெருவயி றருத்தலே விருந்தெனப் பேசும்
குறுகிய நோக்கம் தமிழர் கொள்கையா ?
புதியராய் வந்தார்ப் போற்றி அருத்தலே
விருந்தென அந்நாள் தமிழர் வேண்டினர் ;
'உறவுவண் டுக்கே தேனை உதவுவேன்'
எனவே மலர்தாம் இயம்பிய துண்டோ ?
வளியும் முகிலும் இவ்வணம் பேசி
துளிதர மறுப்பின் துயர்பெரி தன்றோ ?
வீடுகள் தோறும் திண்ணைகள் இயற்றி
மாடிருப் போர்பால் மலர்முகம் காட்டி
உண்ம்மென ஊட்டி உதவிகள் புரிந்து
சென்ம்மென விடுத்த தமிழர் செயலில்
உடைமை பொதுவென எள்ளிய செந்நெறி
திடமுற யாண்டும் திகழ்ந்தது கண்டோம் ;
வைத்த பொருளெலாம் வாழும் மாந்தர்
துய்த்தலுக் கேயெனல் துலங்கலும் கண்டோம் ;
வருவிருந் தோம்பும் வண்மை உளத்தைத்
தெருமிசை அமைத்த திண்ணையே காட்டும் ;
அருளெனும் அருவப் பொருளைக் கண்ணில்
தெருளுறக் காட்டும் வடிவம் திண்ணையே ;
ஆனால்....
திண்ணைகள் தெருவில் தேய்ந்து விட்டன ;
திண்ணைகள் தெருவில் தேய்ந்து விட்டதால்
அருளும் தேய்ந்து பொருள்பொது என்னும்
தெருளும் இன்று தேய்ந்து விட்டதைத்
திண்ணைகள் இல்லா வீடு
கண்முனர்க் காட்டக் கலங்குமென் மனமே !

நாடகத்தின் மேடையிந்த உலக மாகும்
நாமெல்லாம் அதிலாடும் நடிக ராவோம் ;
ஆடவைத்தான் நமையெல்லாம் ஒருவன் ; நல்ல
ஆண்,பெண்ணாய் வேடம்வைத்தான் ;
ஏனோ நம்மைக்
கூடவைத்தான், பிரியவைத்தான், பொம்மை
போலக்
கூத்தாட வைக்கின்றான் ; ஆனா லும்தான்
நாடவைத்தான் இல்லறத்தில், எதற்கென்
றேதான்
நாமறிய முயன்றதுண்டா ? குறளில் காண்க!

பாடுபட்டுப் பொருள்தேடி நாளும் நாளும்
பனித்துளிகள் திரண்டதுபோல் செல்வம்
சேர்த்துக்
கூடுகட்டி வாழுகின்ற வாழ்க்கைக் குள்ளே
கூட்டத்தைக் கூட்டுவது தவறென் றாலும்
வீடுதேடி வந்தவரை வெளியே வைத்து
வீட்டுக்குள் தனியாகச் சுவைத்தி ருக்கும்
கேடுகெட்ட மனமெல்லாம் வேண்டா மன்றோ ?
கிஞ்சித்தும் விருந்தோம்பல் தவற லாமா ?

கொண்டுவிற்று வந்திட்டோம் வேற்று நாட்டில் ;
கோட்டைகொத் தளமாகக் கட்டி
வாழ்ந்தோம் ;
வண்டுபோலச் சுறுசுறுப்பாய் உழைத்து ழைத்து
வருமானம் தனைப்பெருக்கி வாழ்ந்திட் டாலும்

உண்டுபசி யாறுமல், விசேடத் திற்காய்
ஊரெல்லாம் கூட்டித்தான் விருந்து வைக்க
முண்டுக்கல், முகப்பிலுள்ள கதவு, செங்கல்
முதலாக விற்பதிலே பயனுண் டாமோ ?

தான்உண்ணும் உணவினையே விருந்தாய் வந்த
தயரதனின் பிள்ளைக்குக் குகன்ப டைத்தான் ;
வான்புணர்ந்த அன்பாக அதனை ஏற்று
வள்ளலவன் வாழ்த்தியதைக் கம்பன்
சொன்னான்;
தேன்எனினும் அமுதெனினும் நமது சக்தி
தெரிந்தேதான் மகிழ்வுடனே
படைத் தளித்தால்
ஏன்வீட்டை விற்கவேண்டும் ? மிச்சம் மீதி
எச்சிஇலைக் கண்காட்சி குறையு மன்றோ?

வரும்விருந்தை எதிர்நோக்கிக் காத்தி ருந்தே
வக்கணையாய் ஏழெட்டு வகைச மைத்தே
தரும்விருந்தில் ஏழைபணக் கார ரென்ற
தரம்பார்த்துப் பாகுபாட்டை
விதைத்தி டாமல்
பெருவிருந்து படைத்திடுக ! ஏற்றத் தாழ்வுப்
பேதத்தை உடைத்திடுக ! மென்மை மிக்க
அருள்முகத்தை அகத்தன்பைக் கொண்டி ருந்தால்
அகிலத்தில் விருந்தோம்பற் கிணையே இல்லை !

பேருலகில் வந்து பிறந்தோர் பொருள்சேர்த்துச்
சீருயரும் இல்லறத்தைச் செய்வதெலாம்—
ஆர்வமுடன்
வந்த விருந்தை வகையாய் உபசரித்துச்
சிந்தை மகிழவெனச் செப்பு.

நெஞ்சினிலே அன்பு நிறைந்து விருந்தளித்(து)
எஞ்சியதை உண்ணும் இனியவனின்—நன்செய்யில்
தேடி விதைவிதைக்கும் தேவையில்லை தானுகக்
கோடி வளருமென்றே கூறு.

வாழை இலைகொய்து வந்த இளங்குருத்து
தாழஉடல் வீழ்ந்தும் தளராமல்—ஆழமுறும்
அன்பாலே நாவரசாம் அப்பர்க் கமுதளித்த
பொன்பாகு நல்லிதயம் போற்று.

இலங்கையர்கோன் காவலினுல் இன்னலுறும் சீதை
கலங்கிக் கவல்கின்ற போதும்—துலங்குமெழில்
நாயகன்தான் நல்விருந்துக் கென்செயுமோ
என்றுருகும்
நேயம்தான் என்றும் நினை.

விண்ணுலகத் தேவர் விரும்பும் விருந்தாக
மண்ணுலக மாந்தரெலாம் மாறிடலாம் —
கண்ணெனவே
வந்தோரைப் போற்றி வருவிருந்து பார்த்திருக்கும்
சிந்தை அழகிதன் சீர்.

இலக்கியங்கள் காட்டுகின்ற இந்தவழி சென்ருல்
கலக்கும் துயர்கள் கழன்று நிலைக்களன்றும்
வாழும் வகைதெரியும் வற்ரு வளம்குவியும்
சூழும் நலங்கள் சுரந்து.

இருபக்க நாணயம்போல் அன்பு கொண்டே
இளநீரின் சுவைநீராய் அமுதம் ஊட்டும்
விருந்தோம்பல் செட்டிநாட்டின் புகழைக் கூட்டும்
விண்ணவரும் மனமகிழ்ந்து நம்மைச் சேர்வர்
அறுசுவையும் முக்கனியும் விருந்தில் முந்தும்
அடுத்தடுத்த சொந்தங்கள் இதிலே தோயும்
விருந்தோம்பல் ஒன்றில்தான் 'போதும்' என்ற
'விண்ணப்பம்' ஏராளம் வருதல் காண்போம் !

தலைவாழை இலைபோட்டே அருகில் நின்று
தழைத்துவரும் கருமேகக் கூட்டம் போல
நிலைமகிழ வைப்பதெலாம் விருந்தே என்றல்
நிச்சயமாய் விருந்தோம்பல் பெருமை சேர்க்கும்
கலைகண்ட பெருமக்கள் புகழை ஊக்கக்
கனிவுடனே அளிப்பதுதான் விருந்தே ஆகும்
விலையில்லாப் பெருஞ்சொத்தாம் விருந்தை ஓம்பல்
விடிவெள்ளி ஆகட்டும் நெஞ்சில் என்றும் !

இல்வாழ்வில் விருந்தோம்பல் மகிழ்ச்சி யாகும்
இதில்சிறிது குறைந்துவிடின் முகமே வாடும்
செல்விருந்து வருவிருந்து வரவு பற்றுச்
செட்டிநாட்டின் ஐந்தொகையும் இதிலே வாழும்
வில்லுக்கு நாணுகி, விருந்தைப் பேணின்
விழுதூன்றித் தழைப்பதற்கும் வேராய் நிற்கும்
இல்லத்தில் விருந்தோம்பல் கடமை என்பீர்
இனிவளரும் தலைமுறைக்கும் இதுவே பாதை !





அடித்தாலும் அணைத்தாலும் நலமே செய்யும்
ஆண்டவனின் அருள்போல உற்ற நண்பர்
இடித்தாலும் புகழ்ந்தாலும் ஏற்றுக் கொள்ளும்
எழிலான தனிப்பண்பே நட்பாய் நிற்கும்
படிக்கின்ற காலத்தில் கபில னுக்கும்
பாரிக்கும் நட்பென்று படித்த துண்டாம்
பிடிக்கின்ற கைவிரல்கள் நட்பைப் போலப்
பெருமையுறும் இணைப்பினையே நட்பென்
கின்றோம் !

மாதத்தின் முதல்நாளில் முகத்தைக் காட்டி
மறுநாளே மறைந்துவிடும் சம்ப ளம்போல்
ஆதரவாய்ச் சிலநாட்கள் முகத்தைக் காட்டி
அடுத்துடனே மறைந்திடுவார் நண்ப ரல்லர் !
காதலனும் காதலியும் போல வாழ்ந்து
கடுநஞ்சை நட்பாலே அமுத மாக்கி
மாதவனும் குசேலனும்போல் மனத்தி னுலே
மலையினையும் சிறிதாக்கும் மாண்பு நட்பாம் !

பாலுடனே நீர்தன்னைச் சேர்க்கும் போது
பண்பான நட்பாலே ஒன்று சேரும்
பாலென்னும் நண்பனைப்போல் நிறத்தைப் பெற்றுப்
பக்குவமாய் நீர்அதிலே மறைந்து கொள்ளும்
சீலமுடன் அடுப்பினிலே பாலை வைத்தால்
தெரியாத நீர்அங்கே ஆவி யாகும்
கோலமுறும் நீர்நண்பன் சென்ற தாலே
கொதித்துவிட்ட பால்மேலே எட்டிப் பார்க்கும் !

''என்னுடைய நண்பனேயா கொண்டு சென்றீர் ?''
என்றந்தப் பால்வருந்திக் கிளம்பும் போதில்
''உன்னுடைய நண்பனிவன் வந்தா னெ''ன்றே
ஊற்றுங்கள் தண்ணீரை; அடங்கிப் போகும்!
தன்னுடைய நண்பனேயும் தன்னுள் கொண்டு
தழைக்கின்ற நட்புக்குத் தண்ணீர் சான்று
மன்னுபுகழ் பாலுடனே நீரைப் போல
மனத்தாலே வாழ்வதுவே நட்பாய் மாறும்.

கதிரொளியில் ஏழுநிறம் நட்புக் கொள்ளும் ;
கவிதையிலே சொல்லழகு நட்புக் கொள்ளும் ;
விதியோடு மதிசேர்ந்து நட்புக் கொள்ளும் ;
வேட்டியிலே நூலிழைகள் நட்புக் கொள்ளும் ;
சுதியோடு குரல்நட்பே இசையாய் மாறும் ;
சுந்தரனர் சிவநட்போ தூது செல்லும்
பதியோடு பசுநட்பே இன்ப மென்றல்
பாட்டினிலே யார்நட்பைப் பகர வல்லார் !

உணர்வென்னும் எருவிட்டு வளர்த்த நட்பு
உறவென்னும் நிலைமையினும் உயர்ந்த தாகும்!
பணமென்னும் பேய்இடையில் நுழையும் மட்டும்
பாரதத்தின் எவரெஸ்ட்போல் நெடிய தாகும்!
கனல்கக்க இடித்துரைக்கும் உரிமை யோடு
நயவாகப் பிறர்கேட்கப் புகழ வைக்கும்!
குணவாளன் நட்பிருந்தால் அம்ம கிழ்வால்
நெருப்பாற்றில் கூடநாம் நீந்த லாமே!

செல்வத்துக் கொருநண்பன் கல்வி வல்ல
சுந்தரமார் ஒருவனெனச் சிவபி ரானை
வல்லமைசால் இருநட்புக் கொண்ட தாக
வரலாற்றுப் புராணமது விரித்து ரைக்கும்!
எல்லார்க்கும் அதுபொருந்தும் இரண்டு நட்பிங்(கு)
இருந்திடலாம்; இருமனத்து நட்பு வேண்டாம்!
பொல்லாத தீநட்புப் பதிந்து விட்டால்
பொசுக்குகிற கொடுநரகம் வேறொன் றில்லை!

ஏழைமையும் பிழையில்லை; கோழை யாக
இருந்தாலும் குற்றமில்லை வாழ்க்கை ஓட்டில்
தோழமையில் பெறுந்தன்மை மட்டும் வைத்து
தூய்தான பெருந்தன்மை இல்லை யானால்
தாழவரும் இழிபிறப்புத் தகைமை எல்லாம்
தங்கிவரும் வள்ளுவனார் அதனால் தானே
வாழவைக்கும் நட்பென்னும் வளத்தைப் பற்றி
ஐந்தான அதிகாரம் வரைந்து தந்தான்.

சூரியனின் பொற்கதிரும் மலரைக் கண்டால்
சுகங்கேட்டே நட்போடு மகிழ்ந்தே பேசும்
காரிருளும் கண்சிமிட்டும் கோள்க ளோடு
கலகலெனக் கதைபேசிச் சுகித்தி ருக்கும்
மாரிமுகில் மெல்லமெல்ல நகர்ந்து வந்தே
மலைமுகட்டை அரவணைத்தே சிரித்துப் பேசும்
பாரிதனில் அறிவார்ந்த மனிதர் மட்டும்
பலரோடும் நட்புக்கொள மறந்த தேனோ ?

வான்மதியைக் கண்டகடல் அலைக்க ரங்கள்
மகிழ்ந்தெழுந்தே ஆரவாரப் பண்ணி சைக்கும்
தேன்மலர்சேர் தளிர்இலைகள் சிலிர்த்தெ ழுந்தே
தென்றலுடன் குசுகுசுத்தே அன்பாய்ப் பேசும்
கானகத்து விலங்குகளும் தன்னி னத்தில்
கலந்தொன்றாய் நட்போடு கூடி வாழும்
ஆனமட்டும் இவ்வுலகில் மனிதர் மட்டும்
அடுத்தவரைப் பகைத்தேதான் வாழ்கின்றாரே!

கண்டாலும் காணாதார் போலச் செல்வார்
கனிந்தஒரு புன்னகையைச் சிந்த மாட்டார்
மண்டலத்தில் எனக்குநிகர் இல்லை யென்பார்
மாபதவி பணமிவையே பெரிதா மென்பார்
திண்டாடும் நண்பர்பசி போக்க மாட்டார்
தீண்டாதார் என்றுவேறு ஒதுக்கி வைப்பார்
அண்டைவீட் டிருப்போனை அறிய மாட்டார்
அகிலத்தை மாற்றிடவே வழிகள் சொல்வார்.

இந்தவித மனிதருக்கே இயல்பி னூடு
இயற்கைசொலும் நட்பினையே
காட்ட வேண்டும்
பந்தமுடன் மானுடத்தின் நேயந் தன்னில்
பற்றுவர உணர்த்திடவே வேண்டும் வேண்டும்
விந்தைமிகு மனிதஆற்றல் அன்பை பண்பை
மேன்மைமிகு நட்பினையே
உணர்த்த வேண்டும்
சிந்திப்பீர் நட்பொன்றே தெய்வ மாகும்
சேர்ந்தொன்றாய் வாழ்த்துவதே சுவர்க்க
மாகும் !

இதயக் கடலிலோர் இணையிலா முத்து
என்றும் சிறந்திடும் நட்பெனும் சொத்து !
உதய நிலவிலே மலர்களின் கொத்து
உவந்து வழங்கிடும் குளுமையின் அத்து !

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்திடும்
இரண்டு இதயமே நட்பால் பிணைந்திடும்
தங்கு தடைகளைக் கண்டும் கடந்திடும்
தளர்வுகள் மோதினும் மேலும் விளைந்திடும் !

நட்புக் கேதன் வாழ்வைச் சூடமாய்
நயமுடன் மாற்றிடும் தூயவர் வாழ்கிறார் !
நட்புடன் இறைவனை நாடியே போற்றிடும்
நல்லவர் கவிஞராய்ப் பாமழை பொழிகிறார் !

உலகப் பண்புகள் ஓரா யிரத்திலும்
திலக மானது ; திளைக்கத் திளைக்க
உணர்ச்சி தருவது ; உறவுக ளைப்போல்
பணத்தை வைத்துப் பழக வராதது
அன்பை விதைத்தே அறுவடை செய்வது
இன்பச் சுமையை எடுத்துச் சுமப்பதில்
கூலி பேசாத கூட்டு ஒப்பந்தம்
வேலி போடாத வெற்றித் தாவரம்
ஒருவர் பொறுமை, இருவர் நட்பெனும்
அருமை யாலே அணையா விளக்கு
தேய்பிறை என்பதே தென்படாதது
வாய்மை என்ற வலிமை யுடையது
வடபுலம் இருந்து வாடிய சோழன்
இடத்தில் புலவரை ஈர்த்து வந்தது
நடிப்பில் லாதது நல்வழி சொல்வது
இடிக்கும் உரிமையும் எடுத்துக் கொள்வது
உட்பகைப் பூச்சி ஊடுரு வாத
நட்பே உலகில் நாட்பட் டதுவாம் !

இதயவீணை மீட்டுகின்ற
இனிய ராகமே !—வானும்
எழுகடலும் இணைந்துதோன்றும்
உதய காலமே !
மதிமயக்கும் முழுநிலவின்
மௌன கீதமே!—நட்பு
மனவயலில் நிதம்வெடிக்கும்
அன்புக் கதிருமே !

எல்லைமொழி இனங்கடந்து
உறவு கொள்ளுமே!—புதிய
இலக்கியங்கள் இதனுறவில்
மலர்ச்சி காணுமே !
வில்வளைவில் மக்களெல்லாம்
ஒன்று என்னுமே—நோக்கம்
விரிவடைந்து பொதுமையாட்சி
விரைந்து பூக்குமே !

கோல்பிடித்து நாட்டையாண்ட
சோழ வேந்தனும்—எழுது
கோல்பிடித்து நூலையாண்ட
புலவர் ஆந்தையும்
ஆள்முகத்தைக் கண்டுறவை
வளர்த்தவ ரல்லர்!—இறுதி
அடையும்போதும் ஒன்றுபட
மறந்தவ ரல்லர் !

உள்ளமீதில் எழுதிக்கொண்ட
சாசன மாகும் !—பள்ளி
ஒன்றிணைந்து பயின்றகால
நட்புற வாகும் !
மெள்ளவந்த குசேலரை
விரைந்து தழுவினான்—கண்ணன்
வியந்துபோற்றும் செயல்களாற்றி
நட்பில் ஓங்கினான்!

''அன்னையுன்னைப் போலஎன்னை
அன்று தாங்கினான்—உலகை
ஆட்சிசெய்யும் மாட்சியையும்
அவனே நல்கினான்!
இன்னமுதம் ஈந்தவனை
எதிர்த்து நிற்பதா?—தாயே !
இசையேன் !'' என்று நண்பனுக்காய்க்
கர்ணன் போரிட்டான் !

இந்தியாவும் சோவியத்தும்
இணைந்து நின்றன—அதன்
இமயம்போன்ற நட்பைக்கண்டு
உலகம் அஞ்சின !
விஞ்சும்வண்ணம் செய்தொழில்கள்
பெருகி வளர்ந்தன !—புதிய
விடியலினைக் காணமக்கள்
துடித்தெழுந்தனர் !

தொண்டு

தொண்டு வகையும் எத்தனையோ ?
    தொண்டர் தொகையும் எத்துணையோ ?
உண்டி கொடுத்தும் உயிர்காத்தும்
    ஓங்கு கல்வி கற்பித்தும்
மண்டு நோய்க்கு மருந்தளித்தும்
    மாதர் பாலர் நலம்காத்தும்
பண்டைக் கலைகள் அவைபுரந்தும்
    பரவும் தெய்வ நெறிவளர்த்தும்

மன்னும் தேசப் பணிபுரிந்தும்
    வருந்தும் எளியோர் துயர்துடைத்தும்
முன்னைப் பழைய நூல்காத்தும்
    முளைக்கும் புதிய துறைவளர்த்தும்
அன்னை தமிழ்த்தாய் வளம்பெருக்கும்
    அருமைத் தொண்டு பலபுரிந்தும்
இன்னும் இவைபோல் இயற்றஉள
    இனிய தொண்டு பற்பலவாம் !

எள்ளத் தனையும் தன்னலமே
    இல்லா வாறு விலக்கிவிட்டுக்
கள்ளம், கபடம் அரும்பாமல்
    கனிவும், பரிவும் நிரம்பிடுநல்
வெள்ளை உள்ளம் கொண்டவரே
    மேன்மைத் தொண்டு செய்பவராம் !
தள்ள ஒண்ணு அன்னவரால்
    தழைக்கும் இந்த நானிலமே !

உலகில் புராணம் எத்தனையோ
உள்ள எனினும் அவற்றுள்ளே
மலரும் தொண்டர் சீர்பரவும்
வளமார் புராணம் ஒன்றினையே
பலரும் ''பெரிய புராணம்''எனப்
பகரும் உண்மை ஓர்ந்திட்டால்
நிலவும் தொண்டின் மாண்பதனை
நெடிது பேச வேண்டுமோதான்?

எந்தத் துறையில் என்றாலும்
எந்த அளவில் ஆனாலும்
சிந்தை அன்பு கொண்டுலகம்
செழிக்கத் தொண்டு புரிபவர்கள்
நந்தல் இல்லாப் புகழோடு
நல்லோர் பெரியோர் பாராட்ட,
செந்தில் கந்தன் அருள் சுரக்க,
சிறந்து மகிழ்ந்து வாழியவே!

தொண்டு சிறக்க வேண்டும்—வாழ்வில்
தொடர்ந்து நடக்க வேண்டும் ;
கண்டு நாமும் அதனை — நாளும்
கனிந்து போற்ற வேண்டும்.

அன்பு நிறைந்த நெஞ்சில்—தொண்டு
ஆர்வம் நிறைந்து ஓடும் ;
நின்ற பயனைக் காணத்—தொண்டு
நீண்ட பயணம் போகும்.

ஆற்றல் மிகுந்து வாழத்—தொண்டு
அடிஎ டுத்துக் கொடுக்கும் ;
போற்றும் வண்ணம் என்றும்—தொண்டு
புகழைத் தேடிச் சேர்க்கும்.

இனிமை காணும் போக்கில்—தொண்டு
ஈகை வளர்த்து வந்தால்
தனிமை நேரும் போதும்—தொண்டுத்
தகைமை நின்று வாழும்.

மக்கள் வாழ்வில் நாளும்—தொண்டு
மனதில் நிற்க வேண்டும் ;
ஏக்கம் அதனல் தீர்த்து—தொடர்ந்து
எழுச்சி காண வேண்டும் !

எண்ணங் களையே பொன்ஆக்கு—அதில்
எழுச்சி களையே முன்ஆக்கு
திண்ணங் களையே செயல்ஆக்கு—அதில்
திறமை களையே புயல்ஆக்கு.

எதிலும் புதுமை உருவாக்கு—அதை
எவர்க்கும் பொதுவில் வரவாக்கு.
பதிலும் பயனும் நலம்ஆக்கு—தெய்வ
பரமாய் மனிதர் குலம்ஆக்கு.

பணிவே வாழ்வின் பரிவாக்கு—அதில்
பயனைத் தேடல் விரிவாக்கு.
துணிவே என்றும் துணைஆக்கு—அதைத்
தொல்லைக் கெதிராம் கணைஆக்கு.

நாடும் நாமும் ஒன்றுக்கு—அதில்
நவமாம் வாழ்வே என்றுக்கு.
வீடும் கலையே உண்டாக்கு—அந்த
கேள்விக் குனையே தொண்டாக்கு.

தொண்டே மனிதத் துறையாக்கு—அந்தத்
தொண்டின் நிறைவே மறையாக்கு.
உண்டே புனிதம் எனஆக்கு—அதில்
யுககா வியமே நனவாக்கு.

நாடாள் அமைச்சரும் வீடாள் மனைவியும்
நூலறி புலவரும் வேலெறி மறவரும்
சாலவும் பேசும் அரசியல் வாதியும்
காலம் அளந்து கணித்திடும் அறிஞரும்
உழவரும் தச்சரும் ஒவ்வொரு வினைஞரும்
அலுவலர் பலரும் அவரவர் செய்யும்
பணியை மதித்துப் பணிதலை நின்று
செய்தால் அவர்தம் செம்மை மனத்தை
ஆலயம் ஆக்கி ஆண்டவன் இருப்பான்
என்று சான்றோர் இயம்புவர் ; எனவே
மலர்தலை உலகில் மக்கள் யாக்கையைப்
பெற்றவர் பெற்றிடும் பெரும்பயன் யாதெனில் ?
உண்டும் உடுத்தும் உறங்கியும் நாளைப்
போக்கி விடாமல் புவனம் வாழத்
தூய மனத்தொடு தொண்டு செய்து
வளரும் புகழுடன் வாழ்தலே பயனும்.
வானினும் விரிந்ததாய் வளர்ந்து திகழும் ;
கடலினும் பரந்ததாய் காட்சி நல்கும் ;
மலையினும் உயர்ந்ததாய் மாண்புற ஓங்கும் !
தொண்டர் பெருமை சொல்லில் அடங்கா !
தொண்டின் பெருமையோ சொல்லவும் அரிதே.

இறைவன் உறையுள் எதுவென
எங்கும் தேடி அலைவதேன் ?
நிறையும் தொண்டர் நெஞ்சிலே
நிலையாய் நிற்பான் இறைவனே !

தொண்டர் நெஞ்சே கோவிலாய்க்
கொண்டான் ஈசன் என்பதால்
தொண்டர் பெருமை பெரிதெனச்
சொன்னாள் அவ்வைப் பெருமகள்.

தொண்டர் பெருமை தெரியவே
தொண்டன் ஆனான் ஈசனும்
தொண்டர் தமக்கே தொண்டனாய்
தூதும் சென்றான் கண்ணனாய் !

விண்ணோர் தலைவன் பார்த்தனின்
வெற்றித் தேரை ஓட்டினான் !
மண்ணும் சுமந்தான் தொண்டென,
மறைகள் காணாப் பேரருள் !

தொண்டர்க் கில்லை சோர்வுகள்
தொண்டர்க் கில்லை வீழ்ச்சிகள்
தொண்டே அவர்கள் பயன்என
பண்டைக் கீதை சொல்லுமாம்!

தொண்டின் உயர்வை உணர்ந்தவர்
தூய சுகத்தை உணர்ந்தவர் !
தொண்டர் அடிப்பொடி தங்கமாம்,
சொர்க்கம் அவர்தம் சூழலே !

தனக்காக உழைப்பதையே வேலை என்பார் ;
தனைச்சார்ந்தார்க் காயுழைத்தால் கடமை
என்பார்.
கணக்காக இவ்விரண்டை மட்டும் செய்வோன்
காசினியில் முழுமனிதன் ஆக மாட்டான்.
'எனக்காக எனைச்சார்ந்தார்க் காக அன்றி,
இவ்வுலகிற் கென்செய்தேன் ?' என்றே நானும்
தனக்குள்ளே கேட்பதற்குப் பழக வேண்டும்
தைரியமாய் நல்விடைக்கு முயல வேண்டும்.

வேலையையும் கடமையையும் விலங்கு கூட
வெற்றியொடு முடிப்பதனை அறிந்தே உள்ளோம்
பீழையில்லாப் பகுத்தறிவு மனித னுகப்
பிறந்தபயன் நாம்பிறர்க்குச் செய்யும் தொண்டே!
வாலியிடம் தொழில்செய்து சுக்கி ரீவன்
வாழ்வதற்குத் தன்கடமை ஆற்றி, ராமன்
தாள்தனக்குத் தொண்டுசெய்த தாலே, அன்று
தாழ்பிறப்பு விலங்கநுமன் தெய்வ மானுன்.

தொடர்பில்லார்க் கெப்பயனும் நோக்கி டாமல்
துரும்பளவே இயன்ருலும் நன்மை செய்க !
கடவுளுக்கே அதுபிடிக்கும் அதனுல் தானே
கடவுளடி யாரெல்லாம் தொண்டர் ஆனுர் !
நடமாடும் உயிரினத்திற் காற்றும் தொண்டை
நாயகனும் உவந்தேற்பான். ஔவை கூடக்
'கடவுளரே தொண்டரிடம் அடக்கம்' என்று
கவிசொன்னுர் ; அதனுலே தொண்டு செய்வீர் !

பண்பு

எண்சாண் உடம்பு நமக்கிருக்க
ஏனோ ஒருசாண் வயிற்றுக்கே
மண்போல் வாழ்வு முழுவதிலும்
வருந்தி உழைத்துச் சாகின்றோம்!
நண்பால் பிறரை நேசித்தே
நன்மை செய்து மனமகிழும்
பண்பே நம்மைத் தெய்வமெனப்
பரவும் நிலைமை உண்டாக்கும்!

நந்தம் நலமே குறியாக
நண்ணி வாழ்ந்தால் புகழ்ஏது?
இந்த உலகில் எத்தனைபேர்
இயற்றும் உதவி யால்வாழ்வோம்?
முந்தும் உணவு நல்லுடைகள்
முடங்கும் வீடு இவையெல்லாம்
வந்து பிறரும் உதவுவதால்
வாய்க்கப் பெற்று மகிழ்கின்றோம்!

பிறரால் நமக்கு நலம்வருதல்
பெரிதென் றென்ப தைஉணர்ந்தால்
மறவா தவர்க்கு நலம்செய்தல்
வாய்த்த கடமை எனஉணர்வோம்!
உறவாய் யாவர் தமையும்எண்ணி
உபகா ரத்தைச் செய்திருத்தல்
இறவாப் புகழைத் தந்திடுமே
இதுவே மனிதப் பண்பாமே

விலங்கு போல உணவுண்டு
மேவும் பெண்ணின் சுகம்பெற்றால்
நலங்கொள் அறிவு பெற்றஇந்த
நரசன் மத்தால் ஆம்பயன் என்?

கலங்கு பவர்க்கு நலம்புரிந்து
கையா லான உதவிசெய்தே
இலங்கு வதுவே மனிதர்க்கென்
றியைந்த பண்பென் றேதுவரே !

மனித ஞக வாழ்வதற்கு
மாட்சி பிறர்க்கும் நலம்செய்தல்
இனிதென் றவற்றை நாம்நினேவோம் !
என்ப தறிந்து மற்றவர்க்கும்
நனிநம் மாலே அவ்வினிமை
நண்ணும் படியே புரிந்துவரின்
கனிபெற் றுயர்ந்த மரம்எனவே
கருதும் உயர்வு நமைஅடையும் !

தனக்கென் றெண்ணி வையாமல்
சார்ந்த யாவும் பிறர்க்கெனவே
மனதிற் கொண்டு வாழ்பவனே
மனிதர் தம்முள் தேவனும் ;
நினேத்தல் செய்தல் மொழிதல்எல்லாம்
நித்தம் பிறர்க்கா ஆற்றுபவன்
கனேத்த நீர்சூழ் நிலவுலகில்
கடவுள் என்றே புகழ்பெறுவான் !

புண்பா வியஉள் ளத்தார்க்கும்
பொருந்த இன்சொல் கூறிடுதல்
நண்பால் இன்னல் உற்றேரை
நாடி நன்மை புரிந்திடுதல்,
மண்பால் யாரும் நனிவாழ
மனத்தால் எண்ணி அன்புசெய்தல்
பண்பா ளர்தம் இலக்கணமாம்,
பாரில் வாழும் அவர்தெய்வம்!

மனத்தை உடையவன் மனிதன் ; மனத்தில்
பண்பு நிறைந்தவன் மனிதரில் மனிதன் !
உலகினர் பலரும் ஒழுகிடும் நன்னெறி
நலமுற நேர்மையாய் நடப்பதே பண்பென,
பண்புக் கிலக்கணம் பாங்காய் நம்பெரும்
முன்னோர் வகுத்து மொழிந்துள் ளார்கள்.
அரசர் பலர்என இருந்த போதும்அவ்
வரசரின் மேலாய் அரசர்க் கரசர்
என்றே ஒருவர் இருந்தது போல
நன்றும் குணங்களுள் நாயக மான
குணத்தையே பண்பெனக் கூறிடு கின்றோம்
பண்பெனப் படுவது பலரின் சால்பினை
நன்றாய் அறிந்து நடப்பதே ஆகும்
பணத்தை இழப்பினும் பண்பை இழந்திடாத்
தக்க மனிதரைச் சான்றோர் என்றே
மிக்க சிறப்புடன் மேலோர் போற்றுவர்.
எல்லா ரிடத்தும் எளிமையாய்ப் பழகிடும்
நல்ல குணமே நற்பண் பென்னும்
செடிக்கு வேராய்த் திகழ்வதாம் ; மேலும்
துடிப்புடன் பிறர்க்குத் தொண்டு செய்தலும்
அன்பு காட்டலும் அரும்பண் புகளாம்.
இத்தனை இயல்பும் இருப்பவர் தம்மை
உச்சியில் வைத்தே உலகம் மகிழும்
பண்பெனும் சுடரொளி பாரினில் பாய்கவே !

இந்த உலகுக்கு எண்ணற்ற மானுடர்
வந்தனர் சென்றனர் வாழ்வில் திளைத்தனர் !
ஆயினும் சிலபேர் அகன்றஇவ் உலகத்தில்
தாயினும் மேலாய்த் தாம்தொழப் படுகிறார் !
இந்த உலகத்தில் இனியபண் பாளராய்
அந்த மனிதர்கள் அன்று வாழ்ந்ததால்
இன்றும் அவர்நம் இதயத்தில் வாழ்கிறார் !
சொல்லானார் ! பாட்டானார் ! ஜனத்தொகை ஏட்டில்
இல்லாதவ ரானார் இன்றெனினும் இருக்கிறார் !
இவ்விடத்தே இவ்விடத்தே மனிதர் இருந்ததாய்ச்
செவ்விய காவியங்கள் செப்பிடுதாம் எனப்பாடும்
வண்ணம்அவர் பண்போடு வாழ்ந்திருந்தார் பிறர்க்காக !
பண்சிறந்தால் நல்ல பாட்டுச் சிறக்கும் !
பண்பிருந்தால் மனிதர் வாழ்வு சிறக்கும் !
விண்சிறக்கும் படிபறக்கும் பறவைக் கிருக்கும்
வண்ணச் சிறகுகள்போல் வாழுகின்ற மானுடர்க்குப்
பண்பு சிறக்கஇப் பார்சிறக்கும் ஊர்சிறக்கும் !
எண்ணம் சிறக்க எல்லாரும் மகிழ்ந்திருக்க
மண்ணும் சிறக்க மனம்சிறக்க உயர்ந்த
பண்பு சிறக்கும் படிவாழும் சான்றோர்கள்
எண்ணும் எழுத்தும் சிறக்கத்தான் வாழியவே !

மழைக்குள்ள பண்பதுதான்
மாநிலத்தைக் காப்பதுபோல்
அழைக்கின்ற பண்பாலே
ஆவினங்கள் உயர்வதுபோல்
உழைக்கின்ற பண்பாலும்
உளத்தாலும் இவ்வுலகில்
தழைக்கின்ற மானுடத்தின்
தகவுரைக்க முடிந்திடுமோ ?

பண்புகளின் உயர்கூட்டே
பகர்மனித வாழ்வாகும்.
பண்பார்ந்த வாழ்வில்தான்
பன்னலங்கள் மற்றுமிங்கே
பண்புதான் முதலாகிப்
பாரினையே உயர்த்துவதால்
பண்புடையார் இடத்தேஇப்
பாருலகம் உளதென்பார்.

அகம்மலிந்த உவகையிலே
அளிப்பதுவும் நற்பண்பே !
சுகம்எல்லாம் தொண்டில்எனச்
சொல்வதுவும் நற்பண்பே !
புகழ்வதுவும் நற்பண்பே !
புன்மதியார் தீமைகளைத்
தகவோடு இத்தரையில்
தாங்குதுவம் நற்பண்பே !

கற்பதுவும் நற்பண்பே !
கற்றதெனும் வழியினிலே
நிற்பதுவும் நற்பண்பே !
நிலைப்பதுவும் நற்பண்பே !
பொற்பார்ந்த பண்புகளைப்
போற்றி நாம் மகிழ்ந்திடுவோம் !
நற்பண்பே யாவும்என
நாளும்எடுத் தோதிடுவோம்.

பண்பட்ட நிலத்தில் தானே
பயன்பயிர் விளையக் கூடும் ?
பண்பட்ட இசையில் தானே
பாடல்கள் சுவைக்கக் கூடும் ?
பண்புளார் இருந்தால் தானே
பாரிது சிறக்கக் கூடும் ?
பாடமா சொல்ல வேண்டும் ?
பாலரும் அறிவார் அன்றோ ?

உள்ளத்தின் பண்பா டென்றே
உயர்ந்தவர் எதனைச் சொல்வார் ?
நல்லதே எண்ணல், சொல்லல்
நாளெல்லாம் நன்றே செய்யல்,
வல்லமை வாய்த்த போதும்
வழிகளில் பிறழாத் திண்மை
உள்ளதே பண்பா டென்றே
உயர்ந்தவர் வகுத்தார் அன்றே !

பொடிபடப் படத்தான் பூமி
பொன்விளை நிலமாய் மாறும் ;
புடமிட இடத்தான் பொன்னும்
புதுவித மெருகைக் காணும் ;
இடிபட நேரும் போதும்
ஏற்றதை உரமாய் மாற்றும்
இங்கிதம் ஒன்றே பண்பின்
இலக்கண விளக்கம் ஆகும் !

பண்புக்கு நிகரேது கூறு—பாரில்
பலபேர்க்கு வாழ்வினில் இதுஇல்லை பாரு !
பலகோடி செல்வங்கள் பெறினும்— மனிதப்
பண்பின்றி அவற்ருலே பயனேது வேறு !

பண்பினுல் உயர்தலே இன்பம் !—கெட்ட
பதவியால் பணத்தினுல் உயர்தலோ துன்பம் !
என்பதை எண்ணிநாம் உலகில்—மனிதப்
பண்பினைக் கண்ணெனக் காத்திடல் வேண்டும் !

புறஞ் சொல்லும் செயலையே தவிர்த்து — நல்ல
அறமோங்கும் பற்பல செயல்களை ஆற்றி
மறவாமல் செய்ந்நன்றி போற்றி—வாழ்ந்தால்
மாநிலம் கொண்டாடும் உனைநாளும் ஏத்தி !

நமக்கென்று தனிச்சட்டம் வகுப்போம்—இங்கு
நம்பண்பே இதுவென்று நாட்டிற் குரைப்போம் !
நமக்கென்று தொகுத்திட்ட போதும்—கெட்ட
நமன்வந்தால் நமக்கிங்கே எதுவாழ்வில் தேரும் ?



எண்ணத்தில் உயர்ந்து நின்றே
எளிமையாம் வாழ்வு கொண்டால்
மண்ணகத் ததுவே இன்பம்
மற்றெலாம் ஆர வாரம் !
தண்ணளி அன்ப ஹிம்சை
தரணிக்கே வழங்க வந்த
அண்ணலாம் காந்தி கண்ட
அற்புத நெறியி தாமே.

அடக்கமாய் இருத்தல் ஒன்றே
அமரருள் உய்க்கும் என்று
நடக்கவும் மக்கள் வாழ்வில்
நலமெலாம் பெறவும் நீதித்
தொடக்கமும் முடிவும் சொன்ன
தொன்மறைக் குறளும் காட்டும்
படைக்கலம் எளிமை சேர்ந்தால்
பார்மிசை வான நாடே.

இன்பத்தின் எல்லே காண்பார்
எளிமையே வாழ்வாய்க் கொள்வோர் !
துன்பத்தின் இறுதி காண்பார்
துறக்கவாழ் விங்கே தோன்றும் !
அன்பில்தம் சுகமே தோய
ஆருயிர்ப் பணிசெய் வோர்கள்
முன்புச் செவ்வேளின் ஊர்தி
முடிவினில் நிற்குந் தானே.

தூய்மையாம் தொண்டில் பூத்துத்
துலங்கிடும் மலரோ ! இன்ப
வாய்மையும் வளமை தானும்
வளர்ந்திட உதவும் தேனே !
காய்மையை அகற்றி அன்பு
கனிந்தநல் உள்ளம் பேணும்
தாய்மையோ ! எளிமைப் பண்பு
தரணியின் அரசி அம்மா !

நெய்யினைச் சேர்ந்த பண்டம்
நெடிதுநாள் இருப்ப தேபோல்,
தையலைப் போற்றும் நாடு
தகுதியில் சிறப்ப தேபோல்,
செய்யவாம் எளிமை சேர்ந்தால்
சீர்த்திகள் நிலைத்து வாழும் !
பையவே அடக்கத் தோடு
பண்பெலாம் கூடும் அம்மா !

நீதியை நிலைக்கச் செய்யும்,
நினைவினில் அறத்தைக் கூட்டும்,
வேதனை அளிக்கும் வாழ்வின்
வேரினை அழிக்கும் ; ஞாலம்
போதனை வழியே ஏகப்
புதுவழி காட்டி நிற்கும் !
ஆதலால் எளிமைப் பண்பின்
ஆற்றலுக் கிணையும் உண்டோ ?

பொருளினைத் தேடி வாழ்க்கைப்
போரினில் வருந்து மாந்தர்
அருளினைத் துறந்து சான்றோர்
அறத்தினைத் துறந்து நெஞ்சில்
இருளினைச் சேர்த்து வாடி
இருந்திடுங் காலை தெய்வக்
கருணையாம் எளிமை தன்னைக்
காணுதல் எவ்வா றுகும்.

காந்தியை நினைக்குங் காலை
கதருடை எளிமை தோன்றும் !
சாந்தியை எண்ணும் போது
சத்தியம் எளிமை போகும் !
மாந்தராய் வாழ்வோர்க் கிங்கு
மனத்தினில் எளிமை வேண்டின்
காந்தமாம் அன்பு காட்டிக்
கருணையில் வாழ வேண்டும்.

புத்தனின் எளிய கோலம்
புனிதமாம் நெறியைக் காட்டும் !
சித்தரின் எளிமை நாட்டில்
சிவனருள் தோற்றம் காட்டும்!
முத்தமிழ்க் கவிதை சான்றோர்
முயற்சியில் எளிமை யாகும்
இத்தகும் எளிமை மக்கள்
எய்திடற் கரிய தாகும்!

வெள்ளமாய்நீதி நூல்கள்
விளைந்துள இந்த நாட்டில்
வள்ளுவன் குறளைக் கூறி
வாதங்கள் எளிது செய்வார்!
கள்ளமில் குறள்கள் காட்டும்
கவின்நெறி செல்லா மாந்தர்
உள்ளமோ பொய்ம்மை சென்றே
உறைந்திடற் கெளிமை யாகும்

உயர்வினை எண்ணும் மாந்தர்
உள்ளத்தில் எளிமை காண்க!
கயமையை நீக்கி உள்ளக்
கருணையில் எளிமை காண்க!
தயவுடன் அருள்செய் வார்க்குத்
தரணியே எளிமை யாகும்!
அயர்ந்திடா துழைப்பார்க் கிங்கே
ஆற்றலும் எளிமை யாகும்!

இனிமையே வாழ்வின் எளிமை ! என்றதோர்
கனிமொழி ! சான்றோர் கருதிப் பயின்றது !
அன்பு விளைப்பதும் அமைதியைத் தருவதும்
இன்பம் நிறைப்பதும் எளிமை யன்றோ ?
உயர்பல செல்வம் உற்றசான் றோர்கள்
நயமுறு அகிம்சை நல்வழி சென்றோர்
இறையருட் பக்தியில் இனிது திளைத்தோர்
கறைபடா இன்பம் கண்டனர் எளிமையில் !

சங்கரர் போற்றிய தவநெறி எளிமையே !
துங்க மிகுந்த சுடரருள் ஞானியர்
இடையறு தொழுகிய தெளிமை வாழ்க்கையே !
முடிமணி தரித்த மொகல்அவு ரங்கசீப்
கடைப்பிடித் தொழுகிய தெளிமை வாழ்க்கையே !
படிமிசை அறவோர் பகர்மொழி எளிமையே !
காந்தி யடிகள் ஏந்திய தெளிமையே !
சாந்த வினோபா சார்ந்ததும் எளிமையே !
உலகம் போற்றும் உயர்தமிழ் மறையினில்
இலகும் வள்ளுவன் இயல்பும் எளிமையே !

சுத்தசன் மார்க்கச் சுடராய் விளங்கி
சத்யசன் மார்க்கச் சங்கம் நிறுவிய
வடலூர் அடிகள் வடிவும் எளிமையே !
சுடர்அருட் பாவின் சொற்களும் எளிமையே !
வண்ணச் சரபம் மாசிலா மாகவி
தண்ட பாணி சுவாமிதம் உருவினில்
பயன்மிகு ஒண்டமிழ்ப் பாக்களில் எளிமை
நயமுறக் கொண்டே ஞானியாய்த் திகழ்ந்தார் !
எளிமையில் இன்பம் என்றும் நிலைப்பது
தெளிசெந் தேன்எனத் தித்தித் திருப்பதே !

எளிமையே நமக்கு வலிமை—அது
என்றுமே சேர்க்கும் பெருமை !

ஆட்சியில் அமர்ந்திடும் மன்னன்
காட்சிக்(கு) கெளியவ ஞகில்
மாட்சியில் உயர்வா னென்று
சொன்ஞன் புலவன் அன்று !

அடிமை விலங்கினை ஒடித்த
அண்ணலாம் காந்தித் தாத்தா
உடுத்தார் எளிய வேட்டி
உயர்வை என்றும் நாட்டி !

சன்மார்க்க நெறியைப் போற்றி
சாதி மதத்தைத் தூற்றி
நன்மார்க்கங் கண்ட வள்ளல்
நடந்தார் எளிமை துள்ள !

சொல்லின் செல்வர் அண்ணு
வெள்ளைத் தாடிப் பெரியார்
கள்ள மற்ற எளிமை
காட்டிப் பெற்ருர் வலிமை !

எளிமை தன்னைப் போற்று
என்றும் புகழைச் சாற்று
நலியும் நிலையை மாற்று
நாட்டுத் தொண்டை யாற்று !

இந்திய தேசம் எழிலார் நாட்டில்
எத்தனை எத்தனை இனியபண் பாடுகள் !
முந்தி இருக்கும் முதல்பண் பாடு
மோகன மான எளிமைத் தேன்குணம் !
பந்தி படைத்துப் பாச மனத்துடன்
பகைப்புலத் தாரையும் அணைக்கும் எளிமை !
பந்த சொந்தம் பத்துப் பிள்ளையாய்
பரந்து கிடப்பதால் உண்பதில் எளிமை !
ஒருநாள் ஒருதரம் உண்பது வலிமையா
உண்ணு திருந்து உழைப்பது வலிமையா ?
வலிமையைப் பற்றி வழக்குகள் இல்லை
வலியவர் சிலர்;பலர் எளியவர் என்பதால் !
இருவிழி தேடும் சுகம்பெறு விடில்என் ?
இருப்பதைப் பார்த்து மகிழ்வதில் எளிமை !
மூன்று வேளையும் முட்டத் தின்பவர்
முன்னால் இருந்து தின்றால் கூட
மூன்று வேளையும் முடங்கி உழைப்பவர்
முனகி அழுதிடாப் பண்பும் எளிமை !
ஏழைக் கென்றே ஒருகுணம் எளிமை
இருப்பவர் பிறரிடம் விழைவதும் எளிமை !
பணமாள் வோர்க்குப் பகைமை எளிமை
பசித்தவர் தம்தனி உடைமை எளிமை !
இடம்மா றியதில் எளிமை தவிக்குமா ?
இந்தியத் தாயின் இதயம் தவிக்குமா ?

அடக்கம்

முற்றிய செந்நெல் முனைப்பும் செற்றமும்
அற்றே பணிந்து அடங்குதல் காண்பாம் !
அத்தகை அடக்கம் ஆர்ந்த கல்வி
வித்தகர்க் கென்றும் விளங்குதல் வேண்டும் !
சிந்தையின் அடக்கமே செல்வம் அதுதான்
நிந்தையில் பெருநிலை நெடிதே வளர்க்கும் !
சினத்தை அடக்கிடும் செவ்விய மனத்தன்
நினைத்ததை முடிக்கும் நெடுந்திறல் பெறுவன் !
நாவின் அடக்கம் நலமே விளைக்கும்
ஓவாப் பெருமை உயர்வும் அளிக்கும் !
ஆமையைப் போன்ற ஐம்பொறி அடக்கம்
ஏமாப் புடைத்தாய் எழுமையும் காக்கும் !
நிலையில் திரியா நெஞ்சுறை அடக்கம்
மலையின் பெரிதாம் மாண்பினை அளிக்கும் !
செல்வம் அறிவு சீர்த்திப் பெருக்கில்
நல்லியல் அடக்கம் நானிலம் ஏத்தும் !
ஆன்றவிந் தடங்கிய அடக்கம் அணியாய்ச்
சான்றோர்க் கென்றும் சால்புற நிலவும் !
அடக்கம் இல்லா அமைதி யதுவோ
படத்தைச் சுருக்கிய பாம்பினைப் போலாம் !
உறவும் நட்பும் உயர்த்திடும் அடக்கம்
அறமே தொடரும் அடக்கம் மிகினே !
காக்க பொருளா அடக்கம் ; கருதிய
ஆக்கம் ஊங்கு அதனினும் இலையே !

அடக்கம்

ஒரு அற்புத ஆபரணம் !
இதை அணிவதற்கு
அருகதை தேவை !
ஆடம்பர ஆர்ப்பாட்ட
அணி வகுப்புகள் வரும்
ராஜ வீதியில்
அடக்கம்
ஓரத்தில் ஒதுங்கி நிற்கிறது !

எந்த மகாசபையிலும்
அறிமுகம் இல்லாததால்
இதைத் தேடிக் கண்டுபிடிப்பதில்
சிரமம் ஏற்படுகிறது !

விளம்பர வெளிச்சத்தைப் பார்க்க
இதன் கண்கள் கூசுவதால்
நந்தா விளக்குகளின்
நாக்கு நுனிகளில்தான்
இதன் நர்த்தனம் காணலாம்.

ஏனென்றால்
இது துடிப்பான இதயத்தில்
கருவறைக்குள்ளே
எரியும் ஜீவ நெருப்பு !

முரசுகளின் இடிமுழக்கம்
வானைமுட்டும்போது கூட
இந்தக் காவிய வீணை
மௌனமாகவே இருக்கிறது !

மகிழம் பூக்களும்
மந்தாரை மலர்களும்
பூத்துக் குலுங்கும் நந்தவனத்தில்
இந்த ஒற்றைக் குயில்மட்டும்
தனியாக — மிகவும் மெதுவாகக்
கீதம் இசைத்துக்கொண்டிருக்கிறது.

செல்வம் கோடி சேர்ந்தவரும்
சிறந்த நலன்கள் ஆர்ந்தவரும்
நல்ல அடக்கம் கொண்டிருந்தால்
நாட்டிற் கவரே பெருஞ்செல்வம் !

நூல்கள் கற்றுத் தேர்ந்தவரும்
நூறு கலைகள் அறிந்தவரும்
சாலும் அடக்கம் கொண்டிருந்தால்
சான்றோர் அவரே போற்றிடுவோம் !

ஆடை யழகு சிறந்தாலும்
அணிகள் மணிகள் பொலிந்தாலும்
கோடை வெயிலில் நிழல்போலே
கூடும் அடக்கம் உயர்வாகும் !

துணிந்து நின்று செயல்புரிந்து
தூய அறத்தின் வழிநின்று
பணிந்து நடக்கும் பெரியோரே
பாரில் உயர்ந்த செல்வர்களாம் !

குலையா உறுதி மேற்கொண்டு
குறிக்கோள் வெற்றி பெற்றுலகில்
மலையாய் உயர்ந்து நிற்பாரே
மாண்பாம் அடக்கம் கொண்டவரே !

அன்புத் தாய்க்கும்
அறிவுத் தகப்பனுக்கும்
அவதரித்த குழந்தை
''அடக்கம்''

தன்னைத் தழுவியே
தகுதி யாளரைத்
தவறாது உச்சிசேர்க்கும்
தனியுயர் ''ராக்கெட்''

லஞ்ச லாவண்யம்
கொடுக்காமல்
அத்தாட்சி பத்திரமில்லாமல்
எளிதில் பெறும்
''வேலை'' அது !

நல்லெண்ணக் காற்றை
நாற்புறமும் வீசும்
''தென்றல் விசிறி''

அடக்கம்தான் செட்டிநாட்டின் தொடக்க மாகும்
அடக்கத்தை முதலாக்கி அந்த நாளில்
அவனியினை ஆண்டகதை நாடு சொல்லும் !
அடங்குவதே நம்மவரின் பண்பு மாகும்.

செல்வத்துள் சிறந்தசெல்வம் அடக்க மாகும் ;
செல்வர்கட் கதுவேதான் அழகு மாகும் ;
பள்ளியிலே அடங்குகையில் பாடம் வரும் ;
பண்பாளன் என்றநல்ல பேரும் வரும் !

தந்தையர்க்கு அடங்கியவன் பிள்ளை யாவான் ;
தமையனுக் கடங்கியவன் தம்பி யாவான் ;
கொண்டவனுக் கடங்கியவள் மனைவி யாவாள் ;
குலப்பெருமை சேர்ப்பதிலே துணைவி யாவாள் !

அறிவறிந்தே அடங்குபவன் அறிஞ னவான் ;
ஆணையினுக் கடங்குபவன் அடிமையாவான் ;
அன்பினுக்கே அடங்குபவன் மனித னவான் ;
அடக்கத்திற் சிறந்தவனே தேவ னவான் !

ஐம்புலனை அடக்கியவன் ஞானி யாவான் ;
அனைவர்க்கும் அவனேதான் சாமியாவான் ;
மனவடக்கம் கொண்டவனே உலகம் போற்றும்
மனிதர்களுள் மாணிக்கத் தலைவனவான் !

நிலையினில் உயரும் போதும்
நிலமெலாம் புகழும் போதும்
மலையெனச் செல்வம் சேர
மாட்சிகள் குவியும் போதும்
வலையினை விரிக்கும் வஞ்ச
மமதையில் வீழா வண்ணம்
தலையெனத் தடுத்தாட் கொள்ளும்
சக்தியே அடக்க மாகும் !

அடக்கத்தைப் பற்றி நல்ல
ஆன்றோர்கள் சொல்வ தென்ன?
மடல்விரி தாழை போல
மணக்கின்ற வாழ்க்கை தன்னில்
புடமிட்ட பொன்னைப் போலும்
புதுப்புதுக் கவிதை போலும்
குடமிட்ட விளக்குப் போலும்
குறள்போலும் திகழ வேண்டும் !

அறிவுடைச் சான்றோர்க் கெல்லாம்
அடக்கமே அணியாம் ; அந்த
நெறியினைக் கடைப்பி டித்தார்
நிச்சயம் உலகில் வெல்வார் !

துறைதொறும் வெற்றி கொள்ளத்
துடிக்கின்ற இளைஞர் கட்கு
உறைந்திட வேண்டும் நெஞ்சில்
ஒப்பரும் அடக்கம் என்றும் !

அலைகடல் ஆர்ப்ப ரிக்கும்
ஆழ்கடல் அமைதி காக்கும் !
நிலையிலா உலக வாழ்வில்
நின்றுநம் பெயரைக் கூறும்
விலையிலாப் பணிவு ஒன்றே
வித்தகர் போற்றும் பண்பு !
நிலையதை நினைவில் கொண்டால்
நெஞ்சங்கள் வாழ்த்துக் கூறும் !

தன்னம்பிக்கை

படகொடு கடலிற் செல்வோன்
 பாய்ந்திடும் அலைகள் கண்டு
நடுவினிற் கவிழும் என்று
 நடுங்குவ தில்லை ; வான
இடைவெளி பறக்கும் மாந்தன்
 இடர்வரு மோவென் றெண்ணிக்
கடுகள வேனும் அச்சம்
 கருத்தினிற் கொள்வ தில்லை.

சரிவுகள் கண்டு மாந்தன்
 சலிப்புளங் கொள்ளு மாகில்
பரிவுடன் சுரங்கம் புக்குப்
 பசும்பொனைத் தருவ தேது ?
திரிதரும் சுறவும், வீசும்
 திரைகளும் கடலிற் கண்டு
வெருவுறு மாகில் முத்து
 வெளிப்படல் காண்ப தேது ?

எரிசுடர் வான வீதி
 இடர்களை அஞ்சி நின்றால்
அறிவியல் மாந்தன் திங்கள்
 அதனிடை நடப்ப தெங்கே ?
சிறை, துயர், தூக்கு மேடை,
 செக்கடித் தொல்லை கண்டு
வெருவுது மாகில் நாடு
 விடுதலை பெறுவ தெங்கே ?

வாழ்விலும் அலைகள் உண்டு ;
வருமிடர் பலவும் உண்டு ;
வீழ்வுறும் சரிவும் உண்டு ;
விழுங்கிடும் சுறவும் உண்டு ;
பாழ்படும் இவற்றைக் கண்டு
பதறிடா தெதிர்த்து நின்று
தாழ்வுறாத் துணிவை நம்பித்
தலைப்படின் இன்பங் காண்பாய்.

தனதுளத் துணிவை நம்பித்
தாழ்விலா முயற்சி கொண்டான்
வினையிடை ஊழைக் கூட
வென்றிட வல்லான் என்று
மனவளப் புலவன் சொன்னான்
மற்றிதை மறுப்பா ரில்லை ;
உனையினி நம்பு ; வாழ்வில்
உயர்வது திண்ண மிங்கே.

உன்னை நம்புவதே—முருகா
 உயர்ந்த நம்பிக்கை !
தன்னை நம்புவதும்—உன்றன்
 தாள்தொ ழுவதுவே !

வெற்றி தோல்வியென—உள்ளம்
 வீணில் மயங்காமல்
குற்ற வுணர்ச்சிகளால்—மனம்
 குறுகிப் போகாமல்

கையில் எடுத்தபணி—தன்னைக்
 கரிசனை யோடுசெய்தல்
மெய்நி லைத்ததவம்—அதனின்
 மேல் எதுவுமில்லை

நின்று நிலத்தினிலே—மெல்ல
 நிமிரும் தென்னையைப்போல்
என்றும் மனவுறுதி—இருந்தால்
 எதுவும் நிறைவேறும் !

உள்ளத்தில் கோயிலுண்டு—அதனில்
 உண்மைத் தெய்வமுண்டு !
கள்ளமில் லாதவர்க்கே—தெய்வம்
 காட்சி தந்தருளும்.

உலகம் உவப்ப நலம்பல விளேத்தும்
அறிவியல் துறையில் அயர்விலா துழைத்து
பயன்மிகு சாதனம் பற்பல படைத்தும்
அரசியல் துறையில் அவனி மகிழ
வீரம் விளேத்தும் ஈர நெஞ்சொடு
நீதி காத்து, நேர்மையின் ஒழுகியும்
உழைப்பால் உயர்ந்த உத்தமர் பலரால் !
ஊக்கமும் உழைப்பும் வாழ்க்கை எனும்பயிர்
வளர்ந்து செழிக்க வழியமைத் திடுநல்
உரமும் நீருமாய் உறுதுணே செய்வன.
ஊக்கம் கொண்டே உழைக்கத் தூண்டும்
ஆக்க சத்தி அணேயா நெருப்பு
உள்ளுள்ளே கனலும் ஒருபெரும் ஆற்றல்
தன்னம்பிக்கை ! தடைபல நேரினும்
இடுக்கண் பற்பல அடுக்கி வரினும்
மடுத்த வாயெல்லாம் பகடு போல
அடுத்து முயன்று எடுத்த செயலில்
ஏற்றம் காண எழுச்சி கொள்ள
என்ஞல் முடியும் எனும்தன் நம்பிக்கை
இல்லா தொழியின் எங்ஙனம் இயலும் ?
'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என்ற
வள்ளுவர் வாய்மொழி வளர்கதன் நம்பிக்கை
எனவழி காட்டும் இன்மொழி யன்ரே ?
தன்னம் பிக்கையே தளரா உழைப்பின்
ஊற்றுக்கண் ணுக ஒளிர்வத ஞலே
தன்ஞல் முடியும் எனும்தன் நம்பிக்கை
மன்னிய உளமொடு மக்கள் வாழ்ந்தால்
எல்லா நலமும் எய்துவர் என்பதில்
ஐயம் இல்லே ! வையகம் வாழ
வளர்கதன் னம்பிக்கை வழிவழி சிறந்தே !

ஆண்டவனார் தந்ததிந்தப் பிறப்பு—அதை
அறிந்துகொண்டால் அத்தனையும் சிறப்பு
வேண்டுமட்டும் நம்பிக்கை நிலைப்பு—வாழ்க்கை
வேதமிதைப் புரிந்துகொண்டால் இனிப்பு.

ஏற்றமுற மனச்சிறகை விரிப்போம்—நெஞ்சம்
எக்களித்து அறிவுலகில் பறப்போம்
நாற்றிசையும் புதுமைகளைப் படைப்போம்—
தடையை
நம்பிக்கை கோல்கொண்டு உடைப்போம்.

நம்பிக்கை ஒன்றேநம் மூச்சு—வரும்
நலிவுகளை உருக்குமொளி வீச்சு
தும்பிக்கை உதவும்அருள் நீச்சு—தெய்வம்
துணைக்குவரும் வேறென்ன பேச்சு.

கண்இருண்டால் காட்சியென்ன தெரியும்—நல்ல
கருத்(து) இருண்டால் நன்மையென்ன விளையும்
பண்இருண்டால் பாட்டிலென்ன இசையும்—நம்பும்
பண்புஇருண்டால் முன்னேற்றம் சரியும்.

உன்னையே நீநம்பிப் பாரு—இந்த
உலகமே வசமாகும் கேளு
அன்னையைக் கண்டவர்கள் யாரு—அவள்
ஆற்றலுக்கு நம்பிக்கை பேரு.

சின்னஞ் சிறிய ஊரிலே
சிறிய குடியில் பிறந்துமே
பென்னம் பெரிய சாதனை
புரிந்த சிலரை அறிகிறோம்.
தன்னம் பிக்கை யென்றிடும்
சரிந்தி டாத ஏணியில்
என்றும் மேலே மேலேயே
ஏறிச் சென்றார் அவருமே.

தன்னம் பிக்கை அற்றவர்
சாத னைகள் புரிவரோ ?
என்றும் ஐயம் என்றிடும்
இருளே அவரைச் சூழ்ந்திடும்
முன்னே உள்ள பாதையும்
விழிகள் காண்ப தில்லையே !
பொன்னை எதிரே காணினும்
புழுதி யாகத் தோன்றுமே !

தன்னம் பிக்கை யற்றவர்
தனது கைகள் இழந்தவர் !
கண்ணி ருந்தும் குருடராய்க்
கால மெல்லாம் வாழ்பவர் !
தன்னம் பிக்கை கொண்டவர்
தளர்ந்தி டாமல் இயங்குவர் ;
மன்னு புகழைப் பெற்றுமே
மகிழ்ந்து வாழ்வர், நிச்சயம்.

அந்நியர்கள் நமையன்று ஆண்டபோதும்
அடிமைகளாய் நாமெல்லாம் வாழ்ந்தபோதும்
மன்னர்களும் அன்னவரின் தாள்வணங்கி
மண்டியிட்டுத் திறைசெலுத்தி நின்றபோதும்

''நாட்டையாளத் தகுதியுள்ளோர் நாங்களென்று
ஞாயங்கள் சொல்லவந்த அந்நியரே !
நாட்டையினி எங்களிடம் தந்துவிட்டு
நாடிடுங்கள் உங்கள்நாடு'' என்றுரைத்த

கவிபாரதிக்கு இருந்ததுகாண் தன்னம்பிக்கை !
காலமெல்லாம் மக்களுக்குத் தொண்டாற்றிப்
புவியினிலே இனப்பகையைப் போக்கிடவே
புனிதகாந்தி கொண்டதுதான் தன்னம்பிக்கை !

வாழ்வினிலே தன்னம்பிக்கை எனும்பண்பை
வாகான ஆயுதமாய்க் கொண்டிட்டால்
தாழ்வின்றித் தரணிமீது அனைவருமே
தலைநிமிர்ந்து மனிதர்களாய் வாழ்ந்திடலாம் !

எப்பகையும் போக்கிடலாம் வாழ்வினிலே !
எவரையும்நாம் வென்றிடலாம் உலகினிலே !
தப்பென்று தெரிந்திட்டால் விலகிடலாம்
தன்னம்பிக்கை எனும்பண்பு இருந்திட்டால் !



காலத்தை வெல்லும் கலையறிந்த நெடியமரம்
அறிவளக்க முடியாத ஆழத்தில் வேரூன்றி
விழியளக்க முடியாத விதத்தினிலே கிளைபரப்பி
துன்பமெனும் வெய்யிலிலே துவண்டுவரும்
நெஞ்சுக்கட்கு
கருணை நிழலுதவிக் காப்பாற்றும் இனியமரம் !
அன்பு இருக்கிறதே அது
தாக்கவரும் துன்பமெனில் தானே அனுபவித்து
இன்பம் திரண்டுவரில் எடுத்தெடுத்துப்
பங்குவைக்கும்!
கொள்ளை யடித்துக் குவிக்காமல் கருமுகில்போல்
தன்னைக் கரைத்துத் தருவதிலே சுகங்காணும்
எண்ணற்ற வழிகளிலே எத்தனையோ பெயர்களிலே
மண்ணுற்றுப் போகாமல் மானுடத்தை அதுகாக்கும்
கால்கொண்டு உதைக்கின்ற கனியமுதப்
பிள்ளைகட்குப்
பால்கொண்டு தரும்தாயின் பரிவாகச் சுடர்வீசும் !
சேல்கொண்ட விழிமாதர் சிந்தும் குறுநகையில்
மால்கொண்ட நேரத்தில் மௌன மொழிபேசும் !
அழியாத நட்பாகும்; அன்பாகக் கனிந்துருகும்
கைவழியே தொழில்புரியும் ; கைகொடுக்க
முடியாத
காலம் வரும்போது கண்வழியே நீர்சொரியும் !

நீர் சொரிந்து நீர் சொரிந்து நிம்மதிக்குப்
பாத்திகட்டும்
யார்அறிந்து கொண்டார்கள் அன்பின் முழுப்
பெருமையினை
அன்பென்ற ஒன்றிவ் வகிலத்தில் இல்லையெனில்
சுயநலத்தில் வாழ்வு சுடுகாடாய் மாறிவிடும்
சீர்கொய்து சிதைக்கச் சிறுமை முயன்றாலும்
யார்செய்த புண்ணியமோ அன்பின்னும் வாழ்கிறது
பாசமிகும் வாழ்வுப் பயிர்செழிக்க மனத்துள்ளே
ஓசைப் படுத்தாமல் ஓடிவரும் ஜீவநதி !
அன்புதான் வாழ்க்கைக்கு ஆதாரம்—அதுஇன்றேல்
என்புதான் தோல்தான் இருவிழிக்குக் காட்சிதரும்!
கலகத்தில் வாழ்வின் கதைமுடிந்து போகாமல்
உலகத்தைக் காப்பாற்ற அவதரித்த ஒருசக்தி !
வேதனையில் சிதறிவிடும் இதய மணிகளினைச்
சேகரித்துக் கோக்கவந்த தெய்வ ஒளிச்சரடு !
மண்ணுக்குள் ஒளிந்திருந்து மரம்வளர்க்கும்
வேரினைப்போல்
கண்ணுக்குத் தெரியாமல் அன்பின்கனிவு
செயல்புரியும் !
இயங்கப் புரிகின்ற இறையன்புத் தந்திரத்தில்
மயங்கியல்ல வாஇந்த மண்ணுலகம் சுழல்கிறது !
அன்பென்ற ஒன்றிற் கடிமைப்பட் டிருக்கையில்தான்
இன்பசுகம் நமது இதயத்தில் குவிகிறது !
எழுந்துநின்று கொக்கரிக்க இசையாது காலில்
விழுந்து வணங்குதற்கு விரையுமதே அன்பாகும்

அன்பு
கொடுக்கத் துடிக்கும், கொள்ளத் துடிக்காது ;
எடுக்களடுக்கக் கூடும்அது இம்மி குறையாது !
அன்பை
அனுபவித்துப் பார்த்தால்தான் (வாழ்வின்)
அர்த்தம் தெளிவாகும்
பேருக்கு மனிதப் பிறப்பெடுத்தால் போதாது ;
அன்பை அனுபவிக்கும் அதிர்ஷ்டம் வரவேண்டும் ;
சொல்ல முடியாத சுகமதிலே பெறவேண்டும் !
என்னென்ன அழகு எங்கெங்கே இருந்தாலும்
வேராக அதற்கெல்லாம் விளங்குவது அன்பேதான்!
கனிந்துவரும் அன்பின் கழுத்தை முரித்துவிடில்
முடிந்துவிடும் அத்தனையும் மூச்சுப்பேச் சிருக்காது !
அன்பென்ற மந்திரத்துக் கோலின் அசைவால்தான்
சுகம்வந்து சேர்கிறது(எல்லாம்) சுகமாய் முடிகிறது!

உதரத்திற் பெற்று நாளும்
  ஓய்வின்றி வளர்த்து விட்டாள்
இதரமாம் மொழிகள் தம்மை
  எம்முயிர் தமிழாம் அம்மை !
புதிதன்றே தாய்ப்பா சத்தால்
  புவியிது வளர்ந்து வாழும்
விதமதை உரைப்ப தென்றால்
  விரியுமே காவி யங்கள் !

பேழையில் மகனை யிட்டுப்
  பிறரறி யாமல் விட்ட
ஏழைத்தாய் குந்திக் குத்தான்
  எழில்மகன் மறதி யாக,
ஆழமாய் உணர்ந்தான் கர்ணன்
  அன்புற வளர்த்த பாசம்
வாழநல் லிலக்கா கின்றான்
  வளர்பாசம் பெரிதாம் என்றே !

பாசமோர் நூலாம் அன்புப்
  பரிவுடன் கட்ட லாலே !
பாசமோர் நூலாம் இன்பப்
  பல்பொருள் உரைப்ப தாலே !
பாசமோர் நூலாம் இந்தப்
  பாவதை வழங்கி, வைய
மாசகன் றிடவே வாழ்வு
  மலரும்பா வலரின் கையில் !

வான்வெளியில் மதிவிளையும்
வண்ணமிகு மின்மினிகள்
வரிசையாய் விளைந்திருக்கும்
ஆதவனும் விளைவா னன்றோ ?
தேனடையில் சுவை விளையும்
தெளிந் தவர்தம் உள்ளமதில்
ஞானமெனும் பயிர் வளையும்
நாணமிகு பெண் மனத்தில்
வானவரும் போற்றுகின்ற
வன்மைமிகு கற்பு என்னும்
வளர் செல்வம் நாள்தோறும்
வளர் ஒளியாய் விளைந்துவரும்
கானகத்தில் மரம்விளையும்
இலைவிளையும் மலையின் மீது
நீர்விளைந்து அருவியாகும்
வயல்வெளியில் பயிர்விளையும்.

தேன்கதலி பழம்விளைக்கத்
தென்னை மரம் காய்விளைக்க
தெவிட்டாத நறுஞ்சுனைகள்
மலர்விளைக்க, தமிழ்ச்சுவைவிளைக்க
வான்புகழ்சேர் வள்ளல்கள்
கொடை விளைத்து அன்னக்கொடி கட்ட
அறமதுதான் நலம் விளைக்க
அஞ்சாமை புகழ்விளைக்கும்

ஆயிரம்தான் விளைந்தாலும்
அவனருளால் தழைத்தாலும்
பாசமெனும் ஒருபயிர்தான்
விளையாவிட்டால் பயனேது ?
தாய்ப்பாசம் முதலாகத்
தழைக்கின்ற பாசத்தின் வரிசையெல்லாம்
சேய்காக்கும் சிறப்பு நல்கும்
சீர்உலகில் அதற்குஇணை அதுவேயன்றோ?

பாசத்தை பசிய உள்
வேகத்தை இதயத்தில்
கொண்ட பேர்க்கு

விண்ணனை செல்வமும்
வியத்தகு பெற்றியும்
விளைந்திடும் சத்தியந்தாம் !

கொள்வீரோ கொடுப்பீரோ
கொடுத்ததனைக் கேட்பீரோ
கூட்டம் கூடி

எள்வீரோ இகழ்வீரோ
என்றெல்லாம் எண்ணுது
கொட்டுவதே பாசமாகும்.

என்பிலும் தோலிலும்
இழைவீடும் சதையிலும்
இதயம் காட்டும்

அன்பிலும் அறிவிலும்
அடங்காது ஆழநின்று
ஈர்ப்பதே பாசமாகும் !

வாய்வழிச் சொற்களால்
வருகநீ என்பதால்
வருவதில்லை

தாய்உளத் தன்மையால்
தன்தலை உழைப்பினில்
தவழ்வதே பாசமாகும் !

அன்பெனும் கயிற்ருல் எவரையும் பிணைக்கும்
ஆற்றலின் மறுபெயர் பாசம் !
புன்மனக் குகையில் பொலிந்திடும் வைரம்
புதையிருள் போக்குநற் பரிதி !

ஏழையர் செல்வர் இழிந்தவர் உயர்ந்தோர்
இந்தியர் அயலவர் என்னும்
பீழையாம் பேதம் அற்றதே பாசம் !
பெருகுநல் லருளிலே நேசம்.


சாதியைக் கடந்து மதங்களைக் கடந்து
சாற்றிடும் மொழிகடந் திட்டு
மோதிடும் வெள்ளமாய்ப் பாய்ந்திடும் பாசமே,
முன்வரும் தடைதுக ளாகுமே !

பாசமாம், கயிற்ருல் பாரெனும் பம்பரம்
பழுதறச் சுழலுதல் பாரீர் !
பாசமே உயிர்ப்பு ! பாசமே உண்டி !
பாசமே உயிர்களின் உறையுள் !

பாசமில் வாழ்வு பாழ்த்தோர் பாலை
பாலையில் நமக்கிலை வேலை.
பாசமா மழையில் குளித்தெழுந் திடுவோம் ;
பாங்குற வாழ்ந்திடு வோமே !

பாசம் !
இதய வீதியில் உலா வரும்
இளந்தென்றல் !
மனங்களின் சங்கமிப்புகள்
எழுதும் இனிய கவிதை !
வாழ்வு மாளிகையின்
வண்ணத் திறவு கோல் !
உள்மன உணர்வுகளை
ஊடுருவி வருடும்
பிஞ்சுக் கரங்கள் !
இல்லற வீணை இசைக்கும்
இனிய சங்கீதம் !
இதன் வித்துக்கள்
பாறையிலும் பயிர் விளைவிக்கக்கூடிய
வல்லமை பெற்றவை !
ஆனந்தப் பண் பாடுகையிலும்
அவலச் சுவையை நாடுகையிலும்
விழிகளில் நீரைக் கொணரும் சக்தி
இதற்கு மட்டுமே உண்டு !
கிளைவிடும் உறவுகளுக்கெல்லாம்
பாலம் அமைத்துத் தரும் பணியில்
இதற்கும் பங்கு உண்டு !
ஊமை மனங்களின் உறக்க மயக்கத்தில்
பாதை தடுமாறுவதால்

சில சமயங்களில் இது வழுக்குவதும் உண்டு!
அன்புத் தேனை வடிக்கும் இந்த
அழகிய மலர்களின் வனப்பில்
போதையூட்டும் வசந்தக் கிறக்கங்களும் உண்டு!
காலக் கடலில்
கனவுத் தோணிகளைக் கரை சேர்க்க உதவும்
இந்த ஜீவ அமுதம் இல்லாத வாழ்க்கை
அஸ்திவாரமில்லாத அடுக்கு மாளிகை!
இதன் வலிய விழுதுகள்
படர்ந்த இடமெல்லாம்
பசுமை! பசுமை! பசுமை!



பருப்பிட்டு நெய்யிட்டுப் பாசத் தோடு
 பாவையவள் படைக்கின்ற சோறும், மாதர்
விருப்பமுடன் காஞ்சிவரை பறந்து சென்று
 விதவிதமாய் ஆய்ந்தெடுத்து உடுத்தும் பட்டும்,
ஒருதெருவும் மறுதெருவும் இணையு மாறு
 ஒருதொலைக்கல் நீண்டுள்ள உயர்ந்த வீடும்,
பெருகுகிற பேருழைப்பால் விளைந்த தல்லால்
 பெரியதனக் காரர்களின் பணத்தால் இல்லை.

தன்கையே தனக்குதவி எனவு ழைத்துத்
 தாரணியில் உயர்ந்தவர்கள் கோடி உண்டு.
ஒன்றுக்குப் பத்திருந்தும் உழைப்பில் லாமல்
 ஓர்நொடியில் தாழ்ந்தவரும் உலகில் உண்டு.
கன்றுமுட்டிக் குடித்தாலே பால்கி டைக்கும்,
 கையுழைக்கத் துணிந்தாலே பலன் கிடைக்கும்.
ஒன்றுரைப்பேன் : ஒருகுடியை நாட்டைக் காக்க
 உழைப்பொன்றே உறுதுணையென்(று) உறுதி
 கொள்க.

உழைப்பவன் கீர்த்தியை
உயர்த்துகின்ற
மானுடத் துவசங்கள்!
காரல் மார்க்சின்
கல்வெட்டுப் பாறைகள்!
உண்மை பிரசவித்த
உயிர்ச் சாசனங்கள்!
இந்த மலைகளில்
இருந்திறங்கும்
அருவிகளில்தான்
தரைமகள் தனது கவிதைகளைத்
தாலாட்டுகிறாள்!
இந்தத் தோள்களுக்கென்று
தனி மூச்சு உண்டு!
இம்மூச்சு அரும்புகளை—
மண், பனித்துளிகளாலும்
விண்நட்சத்திரங்களாலும்
விமர்சனம் செய்கின்றன!
கடலின் அலைக்கரங்கள்
முத்துக்களை
அச்சுக்கோக்க
முயல்வதெல்லாம் இதற்கோர்
பாராட்டுமடலை
பதிப்பிக்கத்தான்!

இத்தோள்கள் சுமக்கும்
கலப்பைகளைத் தான்
ஏழுவண்ண வில்லில்
வானம்
எழுதிப்பார்க்கிறது.
விண்ணும் மண்ணும்
இங்கே
சந்தித்துத்தான்
கூட்டொப்பந்த அறிக்கை
தயாரிக்கின்றன.
அந்த
அறிக்கை வாசகங்கள்
இயந்திரங்களின்
சக்கரப் பற்களால்
உச்சரிக்கப்படுகின்றன.
பச்சை வயல்களில்
படிக்கப்படுகின்றன.
தோள்—இதுவெறும்
சதையின் உப்பல் அல்ல !
ஆன்ம கவுரவம்
ஆண்மைப் பிரகடனம்
புரட்சியின் கர்ப்பம்.

சுறுசுறுப்போடு சுற்றி வருவதால்
கடிகார முள்
காலத்தின் ஓட்டப்பந்தயத்திலேயே
கலந்து கொள்கிறது.

உரசப்பயந்து ஒய்ந்து கிடந்தால்
தீக்குச்சியை
விளக்குகூட
விவாகரத்து செய்கிறது !

நம்பிக்கை நார்மட்டும்
நம்கையில் இருந்தால்
உதிர்ந்த பூக்களும்
ஒவ்வொன்றாய் வந்து
ஒட்டிக் கொள்ளும்.
கழுத்து மாலையாகவும்
தன்னைத் தானே
கட்டிக்கொள்ளும் !

வரம் கேட்போம் !
நம் கடைசி மூச்சின் காற்றாவது
புதிய விடியலில் வாசிக்கப்படும்
புல்லாங்குழலின் துளைவழியாகத்தான்
போக வேண்டுமென்று
வரம் கேட்போம் !

''உழைப்பில் வாரா உயர்வும் உண்டோ ?''
உலகில் இதற்கே இணையும் உண்டோ ?
சித்தர், பத்தர், முத்தர் ஆயினும்
சித்தம் குலையா நிலையில் உழைப்பை
நித்தம் கொண்டால் மட்டுமே உயர்வு !
நீணிலம் காட்டும் பாடமும் இதுவே !
முயற்சியை உழைப்பை முழுமனத் தோடு,
முனைவுடன் கொண்ட முனிவனும் அந்த
விஸ்வா மித்ரன் பெருமை பெற்ற
விதத்தை நந்தம் குழந்தையும் அறியும் !
விண்ணில் இருந்த விரிநீர்க் கங்கையை
மண்ணிற் கொணர்ந்த மனித முயற்சியைப்
பாரில் உள்ளோர் பலபட இன்றும்
பகீரத னின்ப்ர யத்தனம் என்றே
சீருடன் சிறப்பாய்ச் செம்மாந்து சொல்வது
சகத்தில் உழைப்பின் பெருமையை உணர்த்தவே !
ஆயிரம் தொழிலில் ஈடுபட் டாலும்
ஆயிரம் விதத்தில் பாடுபட் டாலும்
ஒவ்வொரு நாளும் உல்லாச மாக
உட்கார்ந்து நாமும் அருந்தும் உணவு,
உழவன் சிந்திய வியர்வையின் விளைவு !
உழைப்பின் முடிவில் பெற்றநல் அமுது !
உழைப்பால் எதையும் உலகில் பெறலாம் !
உழைப்போர் பின்னால் ஓடிடும் உலகே !

காலமென்ற சோலை தன்னில்
கோல மலராய் மனிதன் மலர்ந்தான் !
வானம் பூமி அவனது வீடு
வாழ்க்கைப் பாதையில் எத்தனை பாடு !
சாமி கொடுக்கும் என்று இருந்தான்
சந்ததம் உழைப்புத் தேவனைத் தொழுது
சிந்தனைத் தேரில் பவனி வந்தான்.
தோல்விகள் அவனின் தோளில் பட்ட
தழும்புகள் அன்றித் தடைகள் இல்லை.
உண்மை என்பதை உளத்தில் அடக்கி
முயற்சி தனையும் முடுகி வளர்த்து
நம்பிக் கைதனை நடுவில் வைத்து
பெற்ற தெல்லாம் வெற்றிச் சிகரம்
பெரும்புகழ் தனக்கு உழைப்பே அகரம் !
மேகம் போலக் கொடுத்துப் பழகலாம்
கால(ம்) முழுதும் பிறர்க்கே உதவலாம் !
எத்தனை அறங்கள் இத்தரை உளதோ
அத்தனை செய்து அரும்புகழ் ஈட்டலாம் !
ஆயினும் அதற்குப் பொருளைத்
தேடினால் அன்றோ செய்திட ஒல்லும்.

ஈடில்லா ஆதவனின் உழைப்பி ஞலே
இருள்நீங்கும் இனிமையாம் 'காலம்' கண்டோம்!
கூடுகின்ற மேகங்கள் உழைப்பி ஞலே
குளிர்மழையும் குடிநீரும் பெருகக் கண்டோம்!
ஓடுகின்ற நீரதனின் உழைப்பி ஞலே
உன்னதமாம் மின்னேட்டம் கிடைக்கக்
கண்டோம்!
நாடுகின்ற காற்றசைவின் உழைப்பி ஞலே
நல்லதொரு தென்றலினுல் நன்மை கண்டோம்!

மரம்வைத்தோன் தண்ணீரைத் தானே விடுவான்,
மகேஸ்வரனும் எவ்வுயிர்க்கும் படியும் அளப்பான்,
சிரமமுறத் தேவையிலே என்று கூறிச்
சிறுஉழைப்பும் செய்யாமற் சோம்பிக் கிடந்தே
அரியதொரு தருணத்தை நழுவ விட்டு
ஆண்டவன்மேல் பாரத்தைச் சுமத்தி, வீணில்
உரியதொரு வாய்ப்புமிக அருகில் இருந்தும்
உழைக்காமல் உருக்குலேந்தோர் பலபே ருண்டு!

தோற்றுகின்ற எண்ணத்தை இறுதி யாக்கி,
தொடங்குகிற தொழிலினிலே உறுதி தேக்கி,
போற்றுகின்ற துணிவோடு திடமும் கொண்டு,
பொழுதிரவு பகலென்று நினேயா தென்றும்
காற்றுள்ள போதினிலே தூற்றிக் கொள்ளக்
கண்ணேடும் கருத்தோடும் கால மெல்லாம்
ஆற்றுகின்ற உழைப்பினுலே அவனி தன்னில்
ஆல்போன்று தழைத்திட்டார் அனேக ருண்டு!

மண்ணிறைந்த வேருழைப்பில் மரங்கள் தழைக்கும்
மகிழ்தேனீக் கள்உழைப்பில் தேனும் இனிக்கும் !
பண்ணிறைந்த பெண்ணுழைப்பில் இன்பம்
பிறக்கும் !
படைவீரர் தம்முழைப்பில் வெற்றி சிறக்கும் !
கண்ணிறைந்த கவிஉழைப்பில் கவிதை மலரும் !
கலைச்சிற்பி கையுழைப்பில் சிலைகள் வளரும் !
எண்ணிறந்த உழைப்பினாலே வாரா உறுதி
இனியொன்றும் உள்ளதெனக் கூறப் போமோ !

காஞ்சனா

சாதனைகள் செய்தோரை உலகத் துள்ள
 சரித்திரநூல் மறப்பதில்லை ; ஆனல் வந்த
சோதனைகள் எல்லாமே புடம்போ டத்தான்
 தோன்றியவை எனக்கொண்டு சோம்ப லின்றி
வேதனைகள் மத்தியிலும் முறுவ லித்து
 விளையாட்டாய் முடிவுகளை ஏற்றுக் கொண்ட
நாதனையே உலகத்தார் போற்று கின்ருர்
 நாகரிகம் மனிதகுலச் சாத னைதான் !

விஞ்ஞானச் சாதனைகள் கோடி கோடி !
 விண்வெளியிற் சாதனைகள் அதனிற் கோடி !
மெஞ்ஞானச் சாதனைகள் கணக்கில் இல்லை !
 மேலோர்கள் எழுதியவை மிகுந்தி ருந்தும்
அஞ்ஞான இருளுக்கோ எல்லை யில்லை
 அதுபடுத்தும் தொல்லைக்கோ அளவு மில்லை
எஞ்ஞானம் வளர்ந்தாலும் இருளுக் குள்ளே
 இருப்போர்கள் சாதனைக்கோ ஈடே இல்லை.

எண்ணெயெலாம் ஒருபக்கம் விலைஏற் றங்கள்
 எடுபிடியும் கெடுபிடியும் இன்னோர் பக்கம்
கண்ணையெலாம் இமைகுத்தும் காட்சி போலக்
 கறைபடிந்த நிர்வாகம் உலகம் தோறும்
விண்ணையெலாம் இடிக்கின்ற போராட் டங்கள்
 விபரீதம் குழப்பங்கள் வேலை இன்மை !
பண்ணையெலாம் தரிசாகும் காலம் இன்று !
 பண்பாடாய் வாழ்வதும்ஓர் சாத னைதான் !

சரித்திரம் படைத்த
சாதனையாளர்கள் எத்தனைபேர்....!
சாதனைகளை எப்படிச் சந்திக்கின்றார்கள் இவர்கள்?
வேதனைகளையே வாழ்க்கையின் விளைச்சலாகக்
கொண்டவர்கள் மத்தியில்
சாதனைகளை எப்படிச் சந்திக்க முடியும்?
சாதனைகள் என்ன சந்தைக் காய்கறியா?
சட்டென்று வாங்கிவர?
ஓ! அது ஒரு பிரசவம்!
ஆர்வம்! கொள்ளை ஆர்வம்! அது முதல் மாதம்!
ஆர்வம், அடக்கமுடியாத ஆர்வம்! அது அடுத்த
மாதம்!
முயற்சி, முழுமுயற்சி—மூன்றாம் மாதம்!
உழைப்பு ஓயாத உழைப்பு – நான்காம் மாதம்!
சில சோதனைகள் நேரும் – இதனால்
பல குறைப் பிரசவங்கள் – அதனால்
ஊக்கம் – இருந்தால் உருவாகும் ஐந்தாம் மாதம்!
தியாகம் – சின்னஞ்சிறு இன்பங்களை அல்ல
தியாகம்—அரிய பெரிய மகிழ்ச்சியை - ஆறாம் மாதம்!
உழைப்பு – மீண்டும் உழைப்பு - ஏழாம் மாதம்!
தியாகம் – மீண்டும் தியாகம் - எட்டாம் மாதம்!
அருள்—ஆண்டவன் அருள்—ஆம்ஆம்—ஒன்பதாம்
மாதம்!
அடக்கம் – பத்தாம் மாதம் தொடக்கம்!
அடுத்தது – சாதனைக் குழந்தையின் ''குவா குவா''
சத்தம்.

இருபது வரிக்குள் சாதனையை
எழுத்தில் வடிக்க வேண்டுமென்றார் !
விரும்பிக் கேட்ட படிஅதனை
விரித்தால் அதுவே சாதனைதான் !
வேதனை பெரிதாய் எண்ணாமல்
வெற்றிப் பாதை தனில்நடந்தே
சாதனை செய்தோர் பெயர்களையே
சரித்திரம் என்றும் தாங்கிநிற்கும் !
ஒளியைக் குப்பி தனில்அடைத்தே
உலகில் இருளை ஓட்டியதும்
வெளியில் திரியும் ஒலியெல்லாம்
வீட்டுப் பெட்டியுள் கொணர்ந்ததுவும்
வானைச் சாலை என்றாக்கி
வண்ணக் கப்பல்கள் விட்டதுவும்
மானிடன் சந்திர மண்டலத்து
மண்ணில் இறங்கி நடந்ததுவும்
பட்டியல் போட்டுச் சாதனைகள்
பலவும் எழுதும் வேளையிலே
கட்டிக் கரும்பென் மாதரசி
கனிவுடன்எதிரில் வந்து நின்றாள் !
உலகம் தோன்றிய நாள் முதலாய்
உதித்தவர் பலரின் சாதனைகள்
பலவும் எழுதப் பார்த்திருந்தேன்
பாவைஎன் சாதனை மறந்தீரோ ?

உங்கள் வருவாய்தனை அறிந்து
ஊதா ரித்தனம் செய்யாமல்
மங்கலமாக மனைநடத்தும்
மங்கைஎன் சாதனை அறியீரோ ?
அடுப்புக் கெண்ணெய் சர்க்கரைக்கு
அடிபிடி நடக்கும் வேளையிலே
அடுப்பில் பூனை உறங்காமல்
ஆக்கிப் படைப்பதென் சாதனையே !
உலகின் மூலையில் ஒன்றென்றால்
ஊரில் பள்ளிகள் மூடிவிடும் !
கலகம் செய்யும் பேர்க்கெல்லாம்
கல்விச் சாலைகள் செயலகமாம் !
தேர்வில் பிள்ளைகள் வெற்றிபெற
தினமும் நானும் படிக்கின்றேன்
மார்க்குகள் எனக்குத் தந்திடவே
மனமும் ஏனோ இரங்கவில்லை !
உண்மை ! உலகில் சாதனைகள்
உள்ளன பலப்பல என்றாலும்
பெண்மை செய்திடும் சாதனையும்
பெரிதென் றேநான் புரிந்துகொண்டேன்.

சிறுசிறு புல்லெ டுத்தே
  சிட்டினம் தாழ்வா ரத்தில்
பெருமையிற் கூடு கட்டும் !
  பூமியி லூர்ந்து செல்லும்
சிறியதாங் கறையான் கூடச்
  செம்மையாய்ப் புற்றெ டுக்கும் !
அருமையாய்ச் சிறுதே னீக்கள்
  அடுக்குடன் கூடு கட்டும்.

சிட்டொடு கறையான் சுற்றித்
  திரிந்திடு தேனீக் கூட்டம்
கட்டிய கூடும் புற்றுங்
  கணக்கிலே சாத னைதான் !
கட்டுடல் மனிதர் சுட்டிக்
  காட்டிடு வண்ணம் வாழ்வில்
தொட்டுமே முடிக்க வேண்டும்
  சிறப்புறச் சாத னைகள் !

வேதனை யின்றி யெந்த
  விளைவுமே வருவ தில்லை !
சாதனை கூட்டிச் சென்ற
  சான்றவர் வாழ்வில் நேர்ந்த
வேதனை யளவெ டுத்தால்
  விண்ணினை முட்டும் ; ஆனால்
சாதனை தோன்றி விட்டாற்
  சாடிய துயர்ம றக்கும்.

பொன்னினைச் சுடச்சு டத்தான்
புதுப்புதுப் பொலிவு தோன்றும் !
எண்ணிலா அடிவாங் கித்தான்
எடுப்புடன் நகைக ளாகும் !
மண்ணொடு கல்லில் தேய்த்தே
வாள்முனை கூர்மை சேரும் !
எண்ணிடி லிடர்கள் தாமே
இங்குசா தனையைக் கூட்டும்.

பிறந்திடல் உண்ணல் வாழ்தல்
பின்னொரு நாள்வந் தக்கால்
மறைந்திட லென்று வாழும்
மக்களை மண்ணில் தோன்றி
ஒருபகற் போதிற் சாகும்
ஈசலென் றுரைப்பர் ; நம்மைச்
சிறப்புள பிறப்பா யாக்கல்
சாதனை ஒன்றே யாகும் !

உத்தமனாய் வாழ்வதற்குக் கற்க வேண்டும்;
உயிர்கொடுத்தும் புகழைநிலை நிறுத்த வேண்டும்;
புத்தனைப்போல் யேசுவைப்போல் தொண்டு செய்து
பூமியிலே சுவடுதனைப் பதிக்க வேண்டும்;
அத்தியினுள் கொசுவாக வாழ்ந்து சாவார்
அவனியிலே அவரெல்லாம் மாந்தர் ஆமோ?
சத்தியமாய்ச் சொல்லிடுவேன் பிறந்த மண்ணில்
சரித்திரத்தைப் படைத்தவரே மாந்தர் என்பேன்.

சரித்திரத்தைப் படைத்தவருள் ஒருவன் என்று
சந்ததிகள் நம்பெயரைச் சொல்ல வேண்டும்;
நரித்தனங்கள் செய்வதையே மூச்சாய்க் கொண்ட
நல்லவரின் நட்பதனை விலக்க வேண்டும்;
தரித்திரமே தொடர்ந்தாலும் கவலை போக்கித்
தாழ்ந்துகை நீட்டுவதைத் தவிர்க்க வேண்டும்;
சிரிப்போடு துன்பத்தை நோக்க வேண்டும்;
சினத்தைநீ பகையாக்கி ஓட்ட வேண்டும்!

பிறருழைப்பில் சுகம்காணும் வாழ்வும் வாழ்வா?
பிறருக்குத் தோள்கொடுத்து வாழ வேண்டும்;
அறவழியில் பொருளீட்டிச் சேரும் செல்வம்
அத்தனையும் வறியவர்க்கு தருதல் இன்பம்!
உறவுனக்கு மனிதகுலம் நினைவில் கொள்க!
உலகமெலாம் நம்வீடு கணியன் சொன்னான்;
மறவாதே வாழ்வுனதே வையம் சொர்க்கம்!
மந்திரத்தால் மாங்காய் தான்பழுப்ப துண்டோ

சத்தியத்தை நெறியாகக் கொண்டு நாட்டில்
சமதர்மப் பயிர்செழிக்க உழைப்பை நல்கி,
வித்தகனுய் கொள்கைவழி வாழ்ந்து காட்டி,
விதிவழிதான் வாழ்க்கையெனும் நிலையை மாற்றி,
செத்தபின்னும் வாழ்வோரின் வரிசை நீளச்
செயலெல்லாம் பிறருக்காய்ச் செய்ய முந்தி
அத்தியாயம் படைத்துவிடு; வாழ்க்கை ஏட்டில்
அப்போது உலகமுனை வாழ்த்தும் பாட்டில்.

இயற்கைத்தாய் சீற்றத்தைப் பண்டை மக்கள்
தெய்வத்தின் சீற்றமென மயங்கிட் டாலும்
பயனுள்ள சிந்தனையால் இயற்கை தன்னைப்
பலவாறு பயனளிக்கச் செய்து விட்டார் !
அயராத உழைப்பாலே வெற்றி கண்டார் !
அவையெல்லாம் சாதனைதான் என்றிட் டாலும்
துயரில்லா வாழ்வுக்கே இற்றை மக்கள்
தொடர்ந்துபல சாதனைகள் புரிய வேண்டும் !

அடிப்படையை மாற்றுவதே புரட்சி யென்னும்
அறிவுமிகு சாதனையாம் ! பண்டு தொட்டு
படிப்படியாய்ச் சிந்தனையில் ஏற்றம் கண்டு
பயனளிக்கும் அறிவியலோ ; வறுமை யற்ற
விடியலுக்கு வழிவகுக்கும் சாத னைதான் !
வேலையிலா நிலையொழிய ஆலை தோறும்
முடிந்தவரை வேலை நேரம் குறைக்க வேண்டும் !
முழுமகிழ்ச்சி பெற்றிடவே உழைக்க வேண்டும் !

ஆர்ப்பாட்ட அரசியலில் இன்று மக்கள்
அகப்பட்டுத் தவிக்கின்றார் ! அமைதி காண
யார்சொன்னார் எவர்சொன்னார் என்றில் லாமல்
எதைச்சொன்னார் எனக்காண்போம் நலமே
தங்கும் !
ஓர்வழியைப் பின்பற்றி உழைப்பின் வர்க்கம்
உயர்ந்திடவே செயல்புரிவோம் சிறந்திருப்போம்!
சோர்வற்ற உழைப்பேசா தனையாம் ! நாடு
சுகம்காண வழியதுவே வளமே பொங்கும் !